உ

# ஸ்ரீ மஹா ருத்ர ஹோம பலன்கள்

தொகுத்தவர் :

**குருஜி கல்யாணராம அய்யர்**

ஸ்தாபகர்

**ஸ்ரீ மகா லக்ஷ்மி யோக பீடம்**

அலுவலகம் : 1/B, முதல் மாடி, சி.எல்.சி. ஒர்க்ஸ் ரோடு,
குரோம்பேட்டை, சென்னை – 44.

செல் : **94444 13521** போன் : **2241 5152**

**Website : www.amirdham.com**
**E-mail : guruji@amirdham.com**

செல் : 94444 13521
போன் : 2241 5152

# ஸ்ரீ மகா லக்ஷ்மி யோக பீடம்

## புராணோக்த புரோகித ப்ரயோக பாட சாலை

அலுவலகம் : 1/B, முதல் மாடி, சி.எல்.சி. ஒர்க்ஸ் ரோடு, குரோம்பேட்டை, சென்னை – 44.
பாடசாலை : 55, துளசிங்கம் தெரு, சாமுண்டீஸ்வரி நகர், குரோம்பேட்டை, சென்னை–44.

ஸ்தாபகர் : **குருஜி கல்யாணராம அய்யர்**

*அன்புடையீர், வணக்கம்*

***ஸ்ரீ மஹா ருத்ர ஹோமம்*** *லோக க்ஷேமத்திற்காகவும், அனைவரின், அதாவது, வேண்டுபவர்களின் மனோ பீஷ்டத்தைப் பூர்த்தி செய்து கொடுப்பதும், நமக்கு தெரிந்தோ, தெரியாமலோ ஏற்பட்ட சாபங்கள், பாபங்கள், தோஷங்கள், பிதுர் சாபங்கள் அனைத்தும் நிவர்த்தி செய்து கொடுக்க வல்ல, மஹா பிராயச்சித்த உபாயமாக அமையும் உயர்ந்த சாதனமாகும்.*

*மேற்சொன்ன பலன்களுக்காக, இந்த ஸ்ரீ மஹா ருத்ர ஹோமம் குரோம்பேட்டையில் 29.5.2011 அன்று நடைபெற உள்ளது.*

*இந்த ஸ்ரீ மஹா ருத்ர ஹோமத்தில் கலந்து கொள்ளும்பொழுது நமக்கு என்ன என்ன மொத்த பலன்கள் கிடைக்க போகின்றது என்று தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா?*

*இந்த மந்த்ரங்கள் அனைத்தும் சமஸ்க்ருதத்தில் உயர்ந்த இலக்கண நடையில் உள்ளது. இந்த முக்கிய மந்த்ரங்களின் அர்த்தங்களையும், இதனால் நமக்கு ஏற்படும் பலன்களையும், அனைவரும் தெளிவாக தெரிந்து கொள்ளும் பொருட்டும், தமிழில் புரியும் படியாக இந்த புத்தகத்தில் கொடுத்து உள்ளோம். இந்த புத்தகத்தை அனைவரும் நன்றாக படித்து பலன்களை தெரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.*

*மேலும், 29.5.2011 அன்று இந்த ஸ்ரீ மஹா ருத்ர ஹோமமும் மற்றும் 28.5.2011 அன்று நிகழ்ச்சி நிரலில் உள்ளபடி நடைபெறும் அனைத்து வைபவங்களிலும் தாங்கள் அனைவரும் கலந்து கொண்டு, முழு பலன்களையும் பெற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.*

*என்றும் உங்கள் குடும்ப சுபீட்சத்திற்கு*
*உதவும் சேவையில்,*
**குருஜி கல்யாணராம அய்யர்**

செல் : **94444 13521**
போன் : **2241 5152**

# ஸ்ரீ மகா லக்ஷ்மி யோக பீடம்

## புராணோக்த புரோகித ப்ரயோக பாட சாலை

அலுவலகம் : 1/B, முதல் மாடி, சி.எல்.சி. ஓர்க்ஸ் ரோடு, குரோம்பேட்டை, சென்னை – 44.
பாடசாலை : 55, துளசிங்கம் தெரு, சாமுண்டீஸ்வரி நகர், குரோம்பேட்டை, சென்னை–44.

ஸ்தாபகர் : **குருஜி கல்யாணராம அய்யர்**

# ஸ்ரீ மஹா ருத்ர ஹோமம்

சதுர் வேதங்கள் என்று சொல்லப்படும் ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களில், யஜுர் வேதம் விசேஷமானது. இந்த யஜுர் வேதத்தில் தலை சிறந்த பகுதியாக கருதப்படுவது, ஸ்ரீ ருத்ரம். யஜுர் வேத தைத்திரீய ஸம்ஹிதை 7 காண்டங்களைக் கொண்டது. இதில் நாலாவது காண்டத்தில் நடு நாயகமாக உள்ளது, **“சிவ பஞ்சாட்சர மந்த்ரம்”**. இந்த ஸ்ரீ ருத்ரம் ஆஸ்திகர்களால், நித்ய பூஜைகளிலும், ஜபத்திலும், ஹோமங்களிலும் தொன்று தொட்டு சிறப்பாக கையாளப்பட்டு வருகிறது. தினந்தோறும் பாராயணம் செய்ய வேண்டிய தாகக்கொள்ளப்படுவைகளுள், இது முக்கிய ஸ்தானம் வகிக்கிறது

யார் யார் எந்தப் பலனை விரும்பினாலும், இந்த ஸ்ரீருத்ரத்தை ஜபம் செய்து, விரும்பிய பலனை பெறலாம். ஸ்ரீருத்ரம், மஹா பிராயச்சித்தம் என்றும், சர்வ பிராயச்சித்தம் என்றும், சகல பிராயச்சித்தம் என்றும், சிறந்த பிராயச்சித்த சாதனமாக கருதப் படுகின்றது. இதற்கு காரணம் என்னவென்றால், ஒரு மரத்தின் வேரில் நீர் ஊற்றினால், எப்படி மரத்தின் எல்லா பாகங்களும் பயன் பெற்று, அந்த மரம் பலன்களை நமக்கு தருகின்றதோ, அதே போல் ஸ்ரீ ருத்ர ஜபத்தால் எல்லா தேவதைகளும் திருப்தி அடைந்து சர்வ பிராயச்சித்த சாதனமாகவும், வேண்டிய அனைத்தும் கொடுக்கும் கற்பக விருட்சமாகவும் அமைந்து உள்ளது.

இந்த ஸ்ரீ ருத்ர பலச்ருதியில் கூறப்பட்டுள்ளதை அப்படியே இங்கே கொடுக்கிறோம். (பலச்ருதி என்றால் இந்த ஸ்ரீ ருத்ரத்தை ஜபம் செய்தால் ஜபம் செய்பவர்களுக்கு என்ன என்ன பலன்கள் கிடைக்கும் என்று கூறும் பகுதி என்றாகும்):

”கிரஹஸ்தாசிரமத்திலுள்ளவன் எப்பொழுதும் பாவத்தைப் போக்க விரும்பினாலும், வியாதியை நீக்க விரும்பினாலும், பகையை ஒழிக்க விரும்பினாலும், நீண்ட வாழ்வை விரும்பினாலும், புத்திரப் பேற்றை விரும்பினாலும், இந்த ருத்ர ஜபத்தை அனுஷ்டித்து ஆசாரியனுக்கு தக்ஷிணையளித்து உபசரிக்க வேண்டும். பின்பு, பிராம்மணர்களுக்கு போஜனம் அளிக்க வேண்டும். இவ்வாறு எவர் செய்கிறார்களே, அவர் எல்லாப் பாவங்களினின்றும் இருந்து விடுபடுகிறார். எல்லா ஆசைகளின் பூர்த்தியையும் எய்துகிறார். இறுதியில் சிவ ஸாயுஜ்யம் அடைவார்”

இந்த ஸ்ரீ ருத்ர ஜபம், ருத்ரம், சமகம் என்று இரு பகுதிகளை கொண்டது. ஒவ்வொரு பகுதியிலும், 11 அனுவாகங்கள் உள்ளன. அதாவது உட்பகுதிகள் உள்ளன.

ஸ்ரீ ருத்ரத்தின் முதல் அனுவாகத்தில் ஈசுவரனுடைய கட்டளையை மீறி நடந்தவர்களிடம் கோபங் கொண்ட, அவர் பிரசன்னராக வேண்டுமென்ற பிரார்த்தனையும், இரண்டாவது அனுவாகம் முதல் ஒன்பதாவது அனுவாகம் வரை அவருடைய ஸர்வேசுவரத்வம், ஸர்வ சரீரத்வம், ஸர்வாந்தர்யாமித்வம், முதலியவற்றைக் குறிக்கும், நாமங்களால் நமஸ்காரமும், பத்தாவது அனுவாகத்தில் பிரஸன்னரான ஈசுவரனிடம் இஷ்டப் பிராப்தி மற்றும் அனிஷ்ட நிவர்த்திக்காகப் பிரார்த்தனையும், பதினொன்றாவது அனுவாகத்தில் ருத்ர கணங்களுக்கு நமஸ்காரமும் கூறப்படுகின்றன.

அடுத்து வரும் சமக அனுவாகங்களில், நாம் ஸ்ரீ ருத்ரனிடம், நம் வேண்டுகோளுக்கு பிரார்த்தனை செய்வதாக அமைகின்றது. அதுவும் இந்த சமக அனுவாகங்களில் உள்ள மந்த்ரங்களின் அர்த்தங்கள் கீழ்க்கண்டவாறு இருக்கும். ஸ்ரீ ருத்ரனை ஆராதிக்கும் எனக்கு இந்த பலன்கள் தானாக சுலபமாக சித்திக்கின்றன. அதாவது பலன்கள் நிச்சயமாக என்னை வந்து அடைகின்றன என்று அர்த்தமாகும்.

இந்த பிரார்த்தனையில் நமக்கு வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்தும் கேட்பதாக அமையும். நம் வாழ்க்கைக்கு எவ்வளவு தேவை என்று நமக்கே தெரியாது. இதைப் படித்தால் தான் அதாவது இந்த சமகத்தில் என்ன இருக்கிறது என்று தெரிந்து கொண்டால் தான் நமக்கு என்ன என்ன வேண்டும் என்று நமக்கு புரியும்.

இதை ஒரு உதாரணம் மூலம் சொன்னால், இதில் உள்ள முழு அர்த்தம் புரியும். நம் எதிரே திருப்பதி ஸ்ரீ

வெங்கடேசப் பெருமாள் பிரத்யட்சமாக ஆகி, ”உனக்கு என்ன என்ன வேண்டுமோ கேள். அவையெல்லாம் தருகிறேன்,” என்று சொல்கிறார் என்று வைத்துக் கொள்வோம்.

ஒரு சராசரி மனிதன் அதிக பட்சமாக கீழ்க்கண்ட வைகளுக்கு மேல் பொதுவாக கேட்பது கஷ்டம்:

Bank Deposit ஆக 1 கோடி ரூபாய்,
சென்னையில் 2 வீடுகள்,
விவசாய நிலம் 10 ஏக்கர்,
கார், Motor Cycle etc.,

இதற்கு மேல் கேட்டால் எங்கு கடவுள் கோபித்துக் கொள்ளப்போகிறாரோ என்ற பயமும் நமக்கு வந்து விடும்.

சமகத்தில் நமக்கு என்ன என்ன வேண்டும் என்று கொடுக்கப்பட்டுள்ளது என்பதனை பார்த்தால், மேலே குறிப்பிட்ட அனைத்தும் 10%க்குள்ளாகத் தான் நிச்சயமாக இருக்கும். இதைத் தவிர மனிதருக்கு எவ்வளவோ தேவை. அவை எல்லாம் சமகத்தில் உள்ளன. அதாவது இன்னும் 90% என்னவென்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா?

இந்த விபரங்களை இந்த புத்தகத்தில் பின் பகுதியில் விரிவாக கொடுத்து உள்ளோம். அனைவரும் இந்த பலன்களை ஒரு முறைக்கு இரு முறை படித்து மனதில் அத்துபடி செய்து கொள்ள வேண்டியது.

## ஸ்ரீ மஹா ருத்ர ஹோமம்

இந்த *ஸ்ரீ மஹா ருத்ர ஹோமம்* 132 ருத்விக்குகளை வைத்து, *ஸ்ரீ* ருத்ரத்தை *1331* முறை பாராயணமும், சமகத்தை *121* முறை பாராயணமும் செய்வதாக அமையும். இந்த ருத்ர மந்த்ர பாராயணத்தில் தசாம்சம் ஹோமங்களும் செய்ய வேண்டும்.

இவ்வளவு விசேஷமான இந்த *ஸ்ரீ மஹா ருத்ர ஹோமம்* செய்து கொண்டாலோ, பலருடன் சேர்ந்து செய்து கொண்டாலோ, இந்த மந்த்ரங்களை காதால் கேட்டாலோ, இந்த ஜப யஞ்யங்களில் அருகில் இருந்து கலந்து கொண்டாலோ, அல்லது, தூரத்தில் இருந்து கண்களால் கண்டாலோ, மஹா பிராயச்சித்தம், சர்வ பிராயச்சித்தம், சகல பிராயச்சித்தம் என்று சொல்லப்படும், நமக்கு தெரிந்தோ தெரியாமலோ ஏற்பட்ட சாபங்கள், பாபங்கள், தோஷங்கள், திருஷ்டிகள், பிதுர் சாபங்கள், அனைத்தும் தீர்ந்து, சர்வாபீஷ்டம், மனோபீஷ்டம், இஷ்ட காம்யார்த்தம் என்றும் சொல்லப்படும், நம் மனதில் இஷ்டமாக நினைத்த அனைத்து காரியங்களும், நாம் இஷ்டமாக நினைத்தபடி நடக்கும் என்பது நிச்சயம்.

மேற்சொன்ன, இந்த விசேஷமான *மஹா ருத்ர ஹோமத்தில்* கலந்து கொள்ளும் பொழுது நமக்கும், நம் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும், நம்மை சார்ந்தவர் களுக்கும், நம்முடைய வருமானத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் ஸ்தாபனங்களுக்கும், என்ன என்ன பலன்கள் கிடைக்கின்றன என்று விரிவாகப் பார்ப்போம்.

**இந்த பலன்களை 4 பிரிவாக பார்க்கலாம் :-**

1. **பலச்ருதி :-**

இந்த ஸ்ரீ ருத்ர பாராயண பலச்ருதியில் கூறப்பட்டுள்ள பலன்களை இங்கே கொடுக்கிறோம். (பலச்ருதி என்றால் “ஸ்ரீ ருத்ரத்தை ஜபம் செய்தால், ஜபம் செய்பவர்களுக்கு என்ன என்ன பலன்கள் கிடைக்கும் என்று கூறும் பகுதி” என்று அர்த்தமாகும்)

இந்த பலன்களை **“பிற் சேர்க்கை ஒன்று”** என்ற பகுதியில் பார்க்கவும். *(பக்கம் 19ல் பார்க்கவும்)*

இந்த பலன்கள், மேற்சொன்ன வைபவத்தில் கலந்து கொண்டாலே, நமக்கு தானாகவே வந்து சேரும் என்று ஸ்ரீ ருத்ரம் சொல்கிறது.

2. **சங்கல்ப்ப பலன்கள் :-**

எந்த ஒரு பூஜைக்கும், ஹோமத்திற்கும் சங்கல்ப்பம் உண்டு. சங்கல்ப்பத்தில் நம்முடைய கோத்திரம், நட்சத்திரம், ராசி, பெயர் முதலிய விபரங்களைக் கூறி, நமக்கும், நம் சக குடும்பத்தில் உள்ளவர்களுக்கும் நாம் செய்து கொள்கிற பூஜைகளின் பலன்களாக, நாம் என்ன எஞ்ன கேட்கிறோமோ அவை எல்லாம் நமக்கு கிடைக்க வேண்டும் என்பதாக அமையும். இந்த அதி ருத்ர மஹா யஞ்யத்திற்கு என்று ஒரு விசேஷமான பெரிய சங்கல்ப்பம் உண்டு. இந்த சங்கல்ப்பத்திலும், நமக்கு வேண்டியவற்றை விரிவாக கேட்கிறோம். இந்த மொத்த சங்கல்ப்ப பலன்களை **“பிற் சேர்க்கை இரண்டு”** என்ற பகுதியில் எல்லோருக்கும் புரியும் படியாக, தமிழில் விரிவாக கொடுத்து உள்ளோம். இதையும் ஒரு முறைக்கு இரண்டு முறை படித்து அவசியம் தெரிந்து கொள்ள வேண்டியது. *(பக்கம் 19ல் பார்க்கவும்)*

3. **சமக பாராயண பலன்கள் :-**

முதலில் குறிப்பிட்டது போல, நமக்கு வாழ்க்கைக்கு என்ன என்ன வேண்டும் என்று நமக்கே தெரியாது. நமக்கு

என்ன என்ன வேண்டும் என்று சமகத்தில் 11 அனுவாகங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த வைபத்தில் கலந்து கொள்பவர்களுக்கு, இந்த பலன்கள் தானாக சித்திக்கின்றன என்றே இந்த மந்தரங்களின் அர்த்தங்கள் அமையும்.

**அதி முக்கியமாக அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டியது இந்த பகுதியை தான் :-**

இந்த *மஹா ருத்ர ஹோமம் செய்ய* பெரிய செலவு ஆகும் பிரயோகம் ஆகும். இவ்வளவு செலவு செய்து நமக்கு என்ன என்ன பலன்கள் கிடைக்க போகின்றது என்று விரிவாக தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா? இந்த பகுதியில் இந்த சமக மந்த்ரங்களின் முழு அர்த்தங்களையும் விரிவாக கொடுக்கிறோம்.

இவை **“பிற் சேர்க்கை மூன்று”** என்ற பகுதியில் உள்ளன *(பக்கம் 27ல் பார்க்கவும்).*

**4. ஸ்நாந மஹா சங்கல்ப்ப பலன்கள் :**

*மனிதனின் பிறந்த நாள் முதல் கணக்கிட்டுச் செய்யப்பெறும் சிறப்பு நிகழ்ச்சிகளில், ஐந்து சாந்திகளும், மூன்று அபிஷேகங்களும் குறிப்பிடத் தக்கவை.*

*அப்த பூர்த்தி சாந்தி என்றழைக்கப்பெறும் குழந்தையின் முதலாம் ஆண்டு நிறைவு விழா, ஐம்பத்து ஒன்பது வயது முடிந்து அறுபதாம் ஆண்டு தொடங்கும் ஜன்ம நக்ஷத்ர தினத்தில் செய்யப் பட வேண்டிய உக்ர ரத சாந்தி, அறுபதாண்டு வாழ்க்கை நிறைவு பெற்று அறுபத்தொன்றாம் ஆண்டு பிறக்கும் ஜன்ம நக்ஷத்ர நாளில் செய்யப்பெறும் ஷஷ்டி அப்த பூர்த்தி சாந்தி, அறுபத்து ஒன்பது ஆண்டுகள் நிறைவுற்று எழுபதாம் ஆண்டு வாழ்க்கை துவங்கும் ஜன்ம நக்ஷத்ர நாளில் செய்யவேண்டி விதிக்கப்பட்டுள்ள பீம ரத சாந்தி, மனித வாழ்க்கையின் எழுத்து எழு ஆண்டுகள், ஏழு மாதங்கள், ஏழு நாட்கள் (77-7-7) நிறைவாகும் நாளில் செய்யவேண்டிய விஜய ரத சாந்தி ஆகிய ஐந்தும் சாந்தி கார்யங்கள்.*

*ஆயிரம் பிறை கண்டவர்க்குச் செய்யப்படும் சதாபிஷேகம் (சுமார் 80 ஆண்டுகள் 6 மாதங்களில் 1000 பிறைகள் கழியும்; அதன்பிறகு ஒரு நல்ல நாளில் சதாபிஷேகம் செய்து கொள்ளலாம் என்ற ஸம்ப்ரதாயம் பெரும்பாலானவர்களால் அனுஷ்டிக்கப்படுகிறது), தன் பிள்ளைக்குப் பிறந்த பிள்ளைக்குப் பிள்ளை (கொள்ளுப்பேரன்) பிறந்த பேறு அடைந்தவர்க்கு செய்விக்கும் கனகாபிஷேகம், நூறாண்டுகள் மங்கலமாக வாழ்ந்த ஒருவர் நூற்றியொன்றாம் ஆண்டில் அடி எடுத்து வைக்கும்போது நிகழ்த்தப்படும் பூர்ணாபிஷேகம் - இம்மூன்றும் அபிஷேக விழாக்கள்.*

**சாந்தி மற்றும் அபிஷேக விழாக்களின் அங்கமாகவும் ஸ்ரீ ருத்ர ஜபம் தற்போது செய்யப்பட்டு வருகின்றது.**

*இதுவரை இழைத்த பாபங்களுக்குப் பிராயச்சித்தம் செய்யவும், இனி வரக்கூடிய சங்கடங்களிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளவும், ஒவ்வொருவரும் குறிப்பிட்டக் காலகட்டத்தில் செய்ய வேண்டியதாக விதிக்கப்பட்டுள்ளவையே சாந்தி செய்யும் நிகழ்ச்சிகள்.*

*ஸ்ரீ ருத்ர ஜபம் மஹாப்பராயச்சித்த சாந்தி கார்யமாக விதிக்கப்பட்டுள்ளது. கடஸ்தாபனம் செய்து, தேவதைகளை பூஜித்து, பின்னர் அக்கலசங்களிலுள்ள புனித நீரைக்கொண்டு அபிஷேகம் மற்றும் ப்ரோக்ஷணம் செய்வதே ஸ்ரீ ருத்ர ஜபம் செய்விக்கும் விதி.*

*இந்த கலசங்களிலுள்ள புனித நீரை அபிஷேகம் அல்லது ப்ரோஷணம் செய்து கொள்ளும்பொழுது “ஸ்நாந மஹா சங்கல்ப்பம்” என்ற மந்த்ரத்தை ஜபித்து ஸ்நானம் செய்யவிப்பர் அல்லது ப்ரோஷணம் செய்வர். இந்த விசேஷ தீர்த்தத்தை நாம் ப்ரோஷணம் அதாவது தெளித்துக் கொள்ளும்பொழுது, நமக்கு என்ன என்ன பலன்கள் கிடைக்கும் என்பது தான் இந்த சங்கல்ப்ப மந்த்ரத்தின் அர்த்தம். இந்த சங்கல்ப்ப மந்த்ரத்தின் அர்த்தத்தின் சாராம்சத்தை* **“பிற் சேர்க்கை நான்கு”** *என்ற பகுதியில் கொடுத்து இருக்கிறோம். (பக்கம் 31ல் பார்க்கவும்)*

இந்த மொத்த வைபவத்தின் நிகழ்ச்சி நிரலை இத்துடன் இணைத்துள்ளோம். *(பக்கம் 12ல் பார்க்கவும்)*

மேலும், இந்த வைபவங்களில் தாங்களும் கலந்து கொள்ள வேண்டும். என்ன என்ன பலன்களுக்காக, என்ன என்ன பொருள்கள் இந்த வைபவத்திற்கு கொடுத்தால் நல்லது என்றும், எவ்வளவு செலவாகும் என்பதனையும் *பற்றிய விபரங்கள் பக்கம் 13ல் பார்க்கவும்.*

*இந்த ஹோமத்திற்கு கைங்கர்யம் செய்பவர்களுக்கு பிரசாதங்கள் கொடுக்கப்படும். இவைகளை நேரில் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலமும் பெற்றுக் கொள்ளலாம். இந்த முழு விபரங்கள் பக்கம் 15ல் கொடுக்கப்பட்டுள்ளன.*

*கைங்கர்யம் செய்பவர்கள் அனைவரும் பக்கம் 16ல் உள்ள சங்கல்ப்பப் படிவத்தில் உள்ள விபரங்கள் தனியாக ஒரு தாளில் தெளிவாக எழுதி அனுப்பவும். இது மிகவும் முக்கிய விஷயம். மறந்துவிடாதீர்கள்.*

இந்த கைங்கர்யங்களை தாங்கள் ஏற்று எல்லா பலன்களையும், தாங்கள் அனைவரும் பெற வேண்டியது. தங்களுக்கும் தங்கள் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும், சுப, சௌக்கிய, சௌகரிய, சௌபாக்யம், தீர்க்க ஆயுள் ஆரேக்கியம் கிடைக்க நாங்களும் பிரார்த்திக்கின்றோம்.

*என்றும் உங்கள் குடும்ப சுபீட்சத்திற்கு*
*உதவும் சேவையில்,*
**குருஜி கல்யாணராம அய்யர்**

## பிற் சேர்க்கை "ஒன்று"

**பலச்ருதி :-**

இந்த ஸ்ரீ ருத்ர பலச்ருதியில் கூறப்பட்டுள்ளதை அப்படியே இங்கே கொடுக்கிறோம். (பலச்ருதி என்றால்" இந்த ஸ்ரீ ருத்ரத்தை ஜபம் செய்தால் ஜபம் செய்பவர்களுக்கு என்ன என்ன பலன்கள் கிடைக்கும் என்று கூறும் பகுதி" என்றாகும்):-

"கிரஹஸ்தாசிரமத்திலுள்ளவன் எப்பொழுதும் பாவத்தைப் போக்க விரும்பினாலும், வியாதியை நீக்க விரும்பினாலும், பகையை ஒழிக்க விரும்பினாலும், நீண்ட வாழ்வை விரும்பினாலும், புத்திரப் பேற்றை விரும்பினாலும், இந்த ருத்ர ஜபத்தை அனுஷ்டித்து ஆசாரியனுக்கு தக்ஷிணையளித்து உபசரிக்க வேண்டும். பின்பு, பிராம்மணர்களுக்கு போஜனம் அளிக்க வேண்டும். இவ்வாறு எவர் செய்கிறார்களே, அவர் எல்லாப் பாவங்களினின்றும் இருந்து விடுபடுகிறார். எல்லா ஆசைகளின் பூர்த்தியையும் எய்துகிறார். இறுதியில் சிவ ஸாயுஜ்யம் அடைவார்"

## பிற் சேர்க்கை "இரண்டு"

**சங்கல்ப்ப பலன்கள் :-**

நான் ஈட்டிய எல்லாத்துயரங்களின் மறைவு ஏற்பட்டு பரம் பொருளின் மகிழ்ச்சிக்காக செயல்படுகிறேன். செயல்படுத்தும் வேளை, நாள், நக்ஷத்திரம், சந்திரன் அறிவு, முன் ஜன்ம கர்ம வினையின் தரம் - அத்தனையும் முழுமையான அளவில் செயலில் வெற்றி பெற பொருத்தமாக அமைந்திருக்கிறது. தற்பொழுது நான் எனது உள்ளத்தில் உறைந்திருக்கும், லக்ஷ்மீபதியின் இரு பாதங்களையும் நினைவு கூறுகிறேன்.

செயல் படப்போதுமான தூய்மை இருக்கிறதோ, இல்லையோ, புண்டரீகாக்ஷனை, தாமரைக்கண்ணன் என்ற பெயரில் விளங்கும் பரம்பொருளை நினைத்தால் அகமும் புறமும் தூய்மை பெற்றுவிடும். மனம், சொல், செயல் இவைகள் வழியில், ஈட்டிய பாபங்களை ராமனின் நினைவு முழுமையாக அகற்றி விடும். அதில் சந்தேஹத்திற்கு இடமில்லை. ஆகையால் ஸ்ரீ ராம, நாம, நாம என்று நினைவு கூறுகிறேன்.

செயல்படும் வேளையில் இருக்கும் திதி, கிழமை, நக்ஷத்திரம், யோகம், கரணம் - இவைகள் அத்தனையும் விஷ்ணுவின் அம்சத்தோடு நிறைந்தவைகள். ஆகையால் அந்த கோவிந்தனை வழிபடுகிறேன். "ஸ்ரீ கோவிந்த, கோவிந்த, கோவிந்த"

செயல்பட விழையும் இன்னாளில் ஐஸ்வர்யத்தோடு இணைத்த பகவான், எல்லாவற்றிக்கும் ஆதியான எங்கும் நிறைந்த பரம் பொருள் என்றும், தோற்றத்தின் ஆதியான நாராயணன் என்றும், சுட்டிக்காட்டப்படும் பரம் பொருளின் சிந்தனைக்கு எட்டாத அளவு கடந்த ஆற்றலால் தாங்கப்பட்டு, எல்லையற்ற நீர்ப் பரப்பின் நடுவில் சுழன்று கொண்டிருக்கும், கோடிக்கணக்கான பிரம்மாண்டங்களில் ஒன்றில் நிலம், நீர், தேஜஸ், காற்று, இடைவெளி, அஹங்காரம், மஹத், அவ்யக்த - இவைகளால் சூழப்பட்டு இருப்பதும். மிகப்பெரிய பிராம்மாண்ட குடுவைக்கு நடுவில் இருக்கும் புவியில், அதற்கு அடித்தளமாக விளங்கும் கூர்மன், அனந்தன் இவர்களோடு, எட்டு திக்குகளின் யானைகளின் சிரஸ்ஸில் அமர்ந்திருக்கும் மேல் பரப்பில் ஸத்யம் முதலிய ஆறு உலகங்களுக்கு கீழ்தளத்தில், பெரிய நாளம் போல் தோற்றமளிக்கும், ஆயிரம் தலை ஆதிசேஷனின் பெருமையில் தாங்கி நிற்பதும், "லோகா லோகம்" என்ற எல்லை மலைகளால் சூழப்பட்டதும் எட்டு திக்கஜங்களின் துதிக்கைகளால் தாங்கி பிடிக்கப்பட்டு விளங்குவதும். உப்பு, கரும்பு, கள்ளு, நெய், தயிர், பால், நீர் - போன்ற மாறுபட்ட சுவையோடு விளங்கும் ஏழு கடல்களால் சூழப்பட்டதும். ஜம்பூ, ப்லக்ஷ, சாக, சால்மலி, குச, க்ரௌஞ்ச, புஷ்கர - என்கிற பெயர்களில் விளங்கும் ஏழு தீவுகளில் மையப்பகுதியில் இருப்பதும், இந்திர,கசேரு, தாம்ர, கபஸ்தி, நாக, ஸௌம்ய, கந்தர்வ, சாரண, பாரத - என்ற ஒன்பது கண்டங்களோடு இணைந்ததும், நடுவில் கர்ணிகையோடு இணைந்த பெரிய தாமரை போல் தோற்றமளிக்கும் மஹா மேருவின் மேல் பரப்பில் ஐம்பது கோடி யோஜன அளவு அகலமான பூ மண்டலத்தில், மேரு, நிஷதம், ஹேம கூடம், ஹிமாசலம், மால்யவான், பாரியாத்ரகன், கந்தமாதனம், கைலாசம், விந்தியாசலம் - முதலிய மலைகளோடு சேர்ந்ததும், உப்பு சமுத்திரத்தை அடையாளமாக வைத்திருப்பதும், பாரத, கிம்புருஷ, ஹரி, இளாவ்ருத, ரம்யக, ஹிரண்மய, குரு, பத்ராச்வ, கேதுமாலாக்ய - என்ற ஒன்பது வர்ஷங்களோடு அழகுற மிளர்வதும் ஆன ஜம்பூ என்ற தீவில், பாரத வர்ஷத்தில் பரத கண்டத்தில், பரம் பொருள் உறைந்திருக்கும் நிலப்பரப்பில், தண்டகாரண்யம், சம்பகாரன்யம், விந்த்யாரண்யம், வீக்ஷாரண்யம், வேதாரண்யம் - என்ற பல புண்ய ஆரண்யங்களில் நடுவில், கர்ம பூமியில், தெற்கே ராமர் பாலம், வடக்கே கேதாரம் - இவைகளின் இடையில் விளங்கும் நிலப்பரப்பில், பாகீரதீ, கௌதமீ, யமுனா, நர்மதா, துங்கபத்ரா, த்ரிவேணீ எல்லா அழுக்கையும் அகற்றும் காவேரி, கிருஷ்ணவேணி போன்ற புண்ய நதிகளோடு தூய்மையானதும், இந்திரப்ரஸ்த, யமப்ரஸ்த, அவந்திகாபுரீ, ஹஸ்தினாபுரீ, அயோதியாபுரீ,மதுராபுரீ, மாயாபுரீ, காசீபுரீ, காஞ்சீபுரீ, த்வாரகாபுரீ என்கிற புண்ய நகரங்களால் ஆன பத்தனங்களால் சூழப்பட்டதும், மேரு மலையின் தெற்கில் ஸ்வாம்யவந்தி, குருக்ஷேத்ரம் - போன்றவைகள் இருக்கும், புவியின் நடுக்கோட்டின் தெற்கில், விந்திய மலையின் தெற்கில், தண்டகாரண்யம், கோதாவரி இவைகளின் தென்திசையில், படைப்புத் தொழிலில் ஈடுபட்ட இரு பரார்த்தங்கள் காலம் வாழும் பிரம்மனின் ஐம்பது வருடங்கள் அடங்கிய முதல் பரார்த்தம் முடிந்து இரண்டாவது ஐம்பதும் வருட கால இரண்டாவது பரார்த்தத்தில் முதல் வருஷம், முதல் மாதம், முதல் பக்ஷம், முதல் நாள், பகலில் இரண்டாவது யாமத்தில், மூன்றாவது முஹுர்த்தத்தில் ஸ்வாயம்புவ, ஸ்வாரோசிஷ, உத்தம, தாமஸ, ரைவத, சாக்ஷீ ஷாக்யேஷீ - என்கிற ஆறு மனுக்களைத் தாண்டி, ஏழாவது வைவஸ்வத மன்வந்தரத்தில், இருபத்தியெட்டாவது கலியுகத்தில் முதல் காலாண்டில், சக ஆண்டில், நிகழ் காலத்தில் நடைமுறையில் பின்பற்றி, சாலிவாஹன ஆண்டில் சாந்த்ர, ஸாவன, ஸௌர - போன்ற அளவு கோலைப் பின் பற்றிய,

பிரபவத்தில் துவங்கும் அறுபது வருஷங்களில் ................................ பெயர் உடைய வருஷத்தில், ............................ அயனத்தில் ............................. ருதுவில் .............................. மாஸத்தில் ............................ பக்ஷத்தில் ............................ மங்களகரமான திதியில், ............................ கிழமையில் .................. நக்ஷத்திரத்தோடு இணைந்த வேளையில், மங்களகரமான யோக, காரணங்களில், இப்படி எல்லா நல்ல வேளையோடு இணைந்த இந்த ............................. சிறந்த திதியில், எல்லா பாபங்களையும் அழிப்பதில் திறமை பெற்ற ஸ்ரீ பரமேச்வரர் என்ற பெயரில் விளங்கும் பரம் பொருளின் மகிழ்ச்சிக்காகவும்.

............................... ரிஷி பரம்பரையில் தோன்றியவனும் ............................... நக்ஷத்திரத்தில், ............................ ராசியில் தோன்றிய ............................ பெயரோடு விளங்கும், எனக்கும் ............................... நக்ஷத்திரத்தில் ............................ ராசியில் தோன்றிய, ............................ பெயரில் விளங்கும் எனது தர்ம பத்னிக்கும் ஆண் - பெண் செல்வங்களோடு இணைந்த குடும்பத்தை (சக குடும்பதஸ்ய) ஏற்ற எனக்கு,

பிறப்பிலிருந்து திரும்பத் திரும்ப நடைமுறைப்படுத்தி பழக்கத்திற்கு வந்தது, பிறப்பிலிருந்து இந்த நொடி வரை இடைபட்டக் காலத்தில் சிறுமை, இளமை, முதுமை போன்ற பரிணாம வளர்ச்சி நிலைகளில், விழிப்பு, உறக்கம், கனவு போன்ற மாறுபட்ட வேளைகளில், காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம், போன்ற மனதின் செயல்பட்டாலும், சிரவணம்,ஸ்பர்சனம், தர்சனம், ரஸனம், க்ராணம் - போன்ற அறிவு பலன்களின் வாயிலாகவும்,காது, தொடு புலன், கண், நாக்கு, மூக்கு, போன்ற புலன்கள் வாயிலாகவும். பேச்சு, எடுத்தல், உலாவுதல், வெளியிடுதல், மகிழ்ச்சியை உணர்தல், போன்றவைகளின் கருவிகளான வாக்கு - பாணி, பாத , பாயு, உபஸ்த என்கிற பேரில் விளங்கும் செயல் புலன்களின் செயல்பாட்டில் விளைந்ததும், பிரம்மஹத்யா - ஸுராபானம் (போதையை தரும் பானங்கள்), ஸ்வர்ணஸ்தேயம் (தங்கத்தைத் திருடுதல்) குருதல்பகமனம் அதோடு இணைந்ததும் ஆன - ஐந்து மஹாபாதகங்கள், கர்பஹனனம், கோ வதம், சிவலிங்க சாலனம் போன்ற அதி பாதகங்கள். குர்வதிக்ஷேப, வேத நிந்தை, நர, குதிரை, வெள்ளி, *பூமி, வஜ்ரமணி,* பெண்கள், பசு, நிக்ஷேபஹரனம் போன்ற ஸம பாதகங்கள், தாய் - தந்தை - குரு - இவர்களைக் கண்டு கொள்ளாமல் இருப்பதும், குளம், நந்தவனம், இவைகளை காசுக்கு விற்பது, தனக்கு மட்டும் பயன்படும் செயலில் ஈடுபடுதல், வாழ்க்கையை நடத்துவது, நன்மை பயக்காத தகவல் அடங்கிய சாஸ்திரத்தைப் பேணிக்காத்து அதன்படி செயல்படல், வாழ்க்கைக்கு உதவும் வேலை வாய்ப்புகளை அழித்தல் - போன்ற உப பாதகங்கள், கழுதை, ஒட்டகம், மான், எருது, ஆடு, செம்மரியாடு, மீன், பாம்பு - போன்றவைகளின், அழிவுக்குக் காரணமாக இருத்தல், போன்ற சங்கரீகரணங்கள்,

பூச்சி, புழு, பறவை, நீரில் வாழும் உயிரினங்கள் இவைகளை அழித்தல், பழம், மரம், செடி, கொடி, புஷ்பங்கள் - இவைகளை அனுமதியின்றி தனதாக்கிக் கொள்ளுதல் - போன்ற மலினீகரணங்கள்.

தூய்மையற்ற செல்வத்தை ஏற்றல், வட்டிப்பணத்தில் பிழைப்பை நடத்துதல், பொய் சொல்லுதல் போன்ற - அபாத்ரீ கரணங்கள், கள்ளு போன்ற நுகரக் கூடாத பொருள்களை நுகருதல், கபடமாக செயல்படுதல், போன்ற ஜாதிப்ரம்சகரங்கள், உடையின்றி நீராடல், தகப்பன், ஆசான், அறிஞர், முதியவர், போன்றவர்களை ஏவலர்கள் போல் நினைத்து, செயல்படுதல் போன்ற ப்ரகீர்ணகங்கள்.

இப்படி ஒன்பது விதமான பாபங்கள், தெரிந்தும், தெரியாமலும், ஒளிவிலும், வெளியிலும், ஒரு தடவையோ, பல தடவையோ, செயல் படுத்தப்பட்ட எல்லா பாபங்களும், தற்பொழுதே முழுமையாக மறைந்து விடவும்,

ஆதவனின் புனித தலத்தில் ............................ அம்பிகை உடனுரை ............................ சுவாமி சந்நிதியில், தெய்வங்கள், அந்தணர்கள் முன்னிலையில், நாராயணன் உருவான அரசு மரத்தின் முன்னிலையில், முப்பத்துமுக்கோடி தேவதைகளின் முன்னிலையில், விநாயகர் முதலிய அனைத்து ஹரி - ஹர தெய்வங்கள் முன்னிலையில்,

(இங்கு அவரவர்களுக்கு வேண்டிய குல தெய்வங்கள், இஷ்ட (விருப்பமான) தெய்வங்களின் பெயர்களை சேர்த்துக் கொள்ளவும்)

குடும்பத்தினருடன் கூடிய எனது பிறப்பின் போது இருந்த நக்ஷத்திரத்தின் காரணமாக, பிறந்த ராசியின் காரணமாக, என் பெயர் ஸம்பந்தப்பட்ட நக்ஷத்திரம் *ராசிகளின் காரணமாக, ஓரை, த்ரேஷ்காணம் நவாம்சம்,* பன்னிரு அம்சம், முப்பதம்சம், அறுபதம்சம், பாவாம்சம், எட்டின் பிரிவு முதலிய ஜாதக சக்ரம் காரணமாக, ஜாதக ரீதியாக க்ரஹங்களின் தொகுப்பமைப்பு, முக்ய க்ரகங்கள், துணை க்ரஹகங்கள், பாவ க்ரஹங்கள், இன்னலைத்தரும், க்ரஹங்கள், மரணத்தை ஏற்படுத்தும் க்ரஹங்கள், கொடிய க்ரஹங்கள், தற்காலிக பல காரணமான க்ரஹங்கள், முதலியவற்றின் சேர்க்கை, பார்வை, அரை பார்வை, அழிவைதரும் பார்வை, ஷட்வர்கத்தின் (க்ரஹ நிலையின்) உருவம் - சரீர நிலை - மனோ நிலை காரணமாக துன்பத்தைத் தரும் எட்டாமிடத்திலும், மரணத்தை தருமிடத்திலும், நீசஸ்தானத்திலும், மாந்தீ, தூமகேது முதலிய உப க்ரஹங்களுடன் கூடிய, சூரியன் முதலிய ஒன்பது க்ரஹங்களின் நடுவில் எந்தெந்த க்ரஹங்கள் துஷ்ட ஸ்தானத்திற்கு அதிபதியாயிருக்கின்றனரோ, எந்தெந்த க்ரஹங்கள் துஷ்டஸ்தானத்திற்கு சேர்த்தியால் உண்டான பாபத்தினால் கெட்டவர்களாயும் உள்ளனரோ, எந்த க்ரஹங்கள் இயல்பாகவே பாபிகளாயுள்ளனரோ, இவ்அனைவருடைய அனுகூலம் ஏற்பட, உடல், வாக்கு, குடும்பம், ஸுகம் , இன்பம், ஆயுள், பாக்கியம், தர்மம், கர்மம், வருமானம், முதலிய நல்லிடத்தில் இருப்பவர் களுமானயவும், இயல்பாக நல்ல ராஜ யோகம் முதலிய பலனை அளிப்பவர்களுமான, சுப க்ரஹங்களுக்கு மிக உயர்வான நற்பலனை அளிக்கும் தன்மை ஏற்படவும், ப்ராராப்த கர்மத் (இப்பிறவி வினைப் பயன்)தினால் கட்டாயம் அனுபவிக்க வேண்டியதாக எதிர்கொண்டு உள்ளனவைகளுடையவும், தற்போது செய்யப்படும், எதிர்காலத்தில் செய்யப்படும் அனைத்து மந்திர, தந்திர, யந்திர, விஷசூர்ண, பில்லி சூன்யம், மை போடுதல் முதலியவைகளால் தூண்டப்பட்டு உடலளவிலும் சுற்று சூழலில் ஏற்படும் தீ விபத்து, இடி முதலியவைகளால் ஏற்படும் துயரங்கள், எதர்பாராத விதமாய் ஏற்படும் நோய் முதலியவைகளால் உண்டாகும் துயரங்களும், தனக்கும், தன்னை சார்ந்தவர்களுக்கும் ஏற்படும் துயரங்களை நினைத்தல், பார்த்தல், இவற்றலுண்டாகும் மனத்துயரும் நீங்கி, விரைவில் ஆரோக்கியம், மன தெளிவு, ஏற்படுவதன் மூலம், குடும்ப விருத்தி நிலையான ஆரோக்கியமிவையனைத்தும் ஏற்பட,

வேதம், தர்ம சாஸ்திரம், இதிஹாஸம், புராணம் இவைகளில் பிரசித்தி பெற்ற ..............

1. "எதை ஜபிப்பதால் அமர நிலை ஏற்படும் - சொல்வீராக" என்று "முக்தி நிலையடைய எது" என கேட்டும் கேள்விக்கு,

2. "இவையே அமுதின் திருநாமங்கள், இவைகளாலேயே அமரனாகிறான்" என்று முக்கியமான மோக்ஷ உபாயமாக ஜாபால உப நிஷத்தால் கூறப்பட்டவைகளும்",

3. "நூறு வேத சாகைகளிலும் உள்ள சதருத்ரீயம் எனும் பகுதி மிகவும் உயர்வானது. ஆகவே அதை ஜபித்தால் மட்டுமே அனைத்து பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான்" *என கந்த புராணத்தினுள், உள்ள ஸூத ஸம்ஹிதையின் மூலம் ஸர்வ பாபங்களையும் நீக்க வல்லதாக அறியபட்டவைகளும்,*

4. நூற்றொரு கிளைகளான யஜுர் வேதத்தில் "ருத்ரோபநிஷத்" கூறப்பட்டுள்ளது என அனைத்து சாகைகளிலும் விளங்குவதாக பட்ட பாஸ்கரர் முதலியவர்களால் துதிக்கப்பட்டவைகளும், மேலும், முன் கூறப்பட்ட ஜாபால உப நிஷத்தின் கேள்வி பதில்களாலும், மோக்ஷம் அடைய ஜபிக்க வேண்டிய மற்ற உப நிடதங்களைக்காட்டிலும், மிகவும் சிறந்ததாக அறியப்பட்டவைகளும்.

5. "அப்போது மஹா தேவன் மகிழ்வுடன் அரசனைப் பார்த்து கூறினார்: 'பாவமற்றவனே இவைகள் எனது ரகஸிய திருநாமங்கள். அனைத்து வேதங்களிலும் பாடப்பட்டவை. ஸம்ஸார துயரை அடக்குபவை. இந்த திருநாமங்களது பதங்களை கூறிக்கொண்டு எப்போதும் வணங்க வேண்டும் சதருத்ரீயமெனுமத்யாயம் யஜுஸ்களின் (யஜுர் வேத அனைத்து பிரிவுகளின்) ஸாரமானது. என்னிடமே மனதை செலுத்தி, மற்றவிடங்களில் மனதை சிதற விடாமல் ஜபிக்க வேண்டும். அத்தகையவன் உயரிய நிலையை எய்துகிறான். ப்ரம்மசர்ய நியமத்துடன், பரமனிடம் நிலைபெற்ற மனதுடையவனாக, கவனத்துடன் கடைசி காலம் வரை ருத்ர ஜபம் செய்தல் வேண்டும். இவ்விதம் அனைத்து ஸம்ஸார துக்கத்திலிருந்தும் விடுபடச்செய்யும் பரம சிவனாரின் திருநாமதொகுப்புடன் கலந்ததாலும், அத்தகைய நமஸ்காரங்களுடன் கலந்ததாலும், பரமகதியை அளிக்கவல்ல இந்த ருத்ராத்யாயம் யஜுர் வேத ஸாரம் என்பது மட்டுமல்ல, அனைத்து வேதங்களிலும், உத்தமமானதும் கூட" என்று இவ்விதம் கூர்ம புராணத்தில் உரத்து கூறப்பட்டுள்ளது.

6. எவன் சதருத்ரீயத்தை அத்யயனம் செய்கிறானோ, அவன் தீயினால் தூய்மையாக்கப்பட்டவனாகிறான். மது பாநம் செய்யும் பாபத்திலிருந்து தூய்மையடைகிறான், ப்ரும்மஹத்தி பாபத்திலிருந்து தூய்மையடைக்கிறான், ஸுவர்ணம் (தங்கம்) திருடுவதாலுண்டான பாபத்திலிருந்து தூய்மையாகிறான். காசி முதலிய மோக்ஷ புரீகளை ஆச்ரயித்தவனாகிறான்.

"அவதூத நிலையடைந்த துறவியும், ஒரு முறையேனும் *ருத்ரத்தை* ஜபித்தல் வேண்டும். இப்பிறவியிலேயே பிறவிப் பிணியிலிருந்து விடுபடுவான்". என கைவல்ய உபநிஷத்தில், ப்ரும்மஹத்தி முதலிய பாபங்கள் செய்தவனது அனைத்து பாபங்களையும் அடக்குவதன் மூலம் பிறவிக் கடலை அழித்து, ஆத்ம ஞானமடைய முக்கிய வழியாக கூறப்பட்டவைகளும்,

7. "ஸ்ருஷ்டிக்கு முன் சூரியன் முதலிய, எந்த ஒளியும் இல்லாத காலத்தில் சுத்தப்ரும்மாக சின்மயோஜ்யோதியாக சிவன் ஒருவரே இருந்தார். அவரே முதலில் தன்னிடத்திலிருந்து ரஜோ குண ரூபம் கொண்ட ப்ரம்ம தேவனை படைத்தார். படைக்கும் தொழிலில் ஈடுபடுத்திய அவருக்கு வேதங்களை அளித்தார். மேலும் ஆத்ம தத்துவச் சுருக்கமான ஸர்வ உப நிடதங்களின் ஸாரமான ருத்ராத்யாயத்தை அளித்தார். அந்தப்ரும்ம தேவரும், மரீசீ, அத்ரி முதலிய முனிவர்களுடனும், தேவர்களுடனும், ருத்ராத்யாயத்தை ஜபித்தார். அவர்களிடமிருந்தும், அவர்கள் சிஷ்யர்கள் நூறு பேர் ஏற்றுக் கொண்டனர். இதுவே உங்களுக்கு உயர்ந்த மந்திரம், உயர்ந்த தவம். ருத்ராத்யாய ஜபம் மனிதர்களுக்கு மோக்ஷத்திற்கு உயரிய சாதனம். மஹா பாதகங்கள், உப பாதகங்களுடன் கூடியவர்களும் ருத்ராத்யாய ஜபத்தினால் பரகதியை அடைகிறார்கள்." இவ்விதம் ஸ்ருஷ்டியின் ஆதியில் ஸ்ரீ பரமேச்வரர் முகத் தாமரையிலிருந்து வெளி வந்ததாகவும் ப்ரும்மா மரீசீ, அத்ரி, முதலிய முநிச்ரேஷ்டர்களின் பரம்பரையில் வழி வழியே வந்ததும், உயர்ந்த மந்திரமாகவும், உயர்ந்த தவமாகவும் ஸர்வ உபநிஷத் ஸாரமாகவும், ப்ரம்மோத்தர கண்ட-காண்டத்தில் கூறப்பட்டதும்,

8. "கைவல்யம் அடைய வழியாக ருத்ராத்யாயம் பூமிக்கு வந்ததும் பாபத்தின் தலைவர்கள் அனைவரும் பயந்து *ஓடினர்.* உப பாதகங்களுடன் அவர்கள் யமனிடம் இவ்விடம் விண்ணப்பித்துக் கொண்டனர். "ப்ரபோ, நரக லோகத்தின் வளர்ச்சிக்காக அதிகாரம் அளிக்கப் பட்டவர்களாக செய்யப்பட்ட நாங்கள் தற்போது பூமியில் இருக்க முடியவில்லை. *ருத்ர ஜப வலிமையினால் பொசுக்கப்பட்டு நாங்கள் ஓடுகிறோம். கிராமங்கள்தோறும், நதிக்கரைகளிலும், புண்ணிய கோயில்களிலும்* ருத்ர ஜபம் நிறைந்திருப்பதால் நாங்கள் எவ்விதம் ஸேவை செய்வது? ஆயிரம் விதமான ப்ராயச்சித்தங்களையும் நாங்கள் மதிப்பதில்லை. ஆனால் ஒரு கணம் ஜபிக்கப்படும் ருத்ரத்தை எங்களால் தாள முடியவில்லை. மஹா பாதங்களாகிய எங்களுக்கும், எங்கள் பரிவாரத்திற்கும் ருத்ர ஜபம் என்பது பயங்கரமானது. ருத்ர ஜபம் எங்களுக்கு விஷம் போன்றது, என அனைத்து பாவங்களுக்கும் ப்ராயச்சித்தமாக, நரக லோகத்தை நிறைக்க விரும்பும் யமனால் தூண்டப்பட்ட மஹா பாதகங்கள், உப பாதகங்களாகிய கிங்கரர்களை பயந்தோட செய்வதாகவும், யம தூதர்களுக்கு தாங்கிக் கொள்ள முடியாத துயரத்தை உண்டாகக் கூடியதாகவும், மற்ற எல்லா ப்ராயச்சித் தங்களைக் காட்டிலும் மிகவும் உயர்வாக ப்ரம்ஹ்மோத்தர கண்டத்தில் கூறப்பட்டவைகளும்,

9. "வேதத்தை ஒரு முறை ஓதியவன், அதே நாளில் தூய்மை அடைகிறான். ருத்ரைகாதசினீயை ஜபித்தவன், அந்த கணத்திலேயே தூய்மையடைகிறான். வேரில் நீர் ஊற்றுவதால் மரத்தின் கிளைகள் புஷ்டியடைவது போல், ருத்ர ஜபத்தினால், சிவன் ப்ரீதியடைந்தால், அனைத்து தேவர்களும் மகிழ்கிறார்கள். ஆகையால் ருத்ர ஜபத்தினாலேயே இஹ பர ஸுகங்கள் கிடைக்கும்". என்று ஸூத ஸம்ஹிதை வாக்யத்தினாலும்.

10. மஹேச்வரனை த்யானித்துக் கொண்டு எவன் ருத்ர ஜபம் செய்வானோ, அவன், கடலை எல்லையாகக்

**முக்கிய விஷயம் :** உக்ர ரத சாந்தி, சஷ்டியப்த பூர்த்தி சாந்தி, பீம ரத சாந்தி, விஜய ரத சாந்தி, சதாபிஷேகம் செய்து கொள்ளாதவர்கள், செய்து கொள்ள முடியாதவர்கள் அனைவரும் இந்த நிகழ்ச்சியில் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டியது.

இந்து மத சம்பிரதாயத்தில், குல விருத்தி, கோத்ர விருத்தி, வம்ச விருத்தி, புத்ர விருத்தி, குடும்ப விருத்தி என்று சொல்லப்படும் குடும்ப சுபீட்சத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

இவை அனைத்தும், இந்த மஹா ருத்ர ஹோம வைபத்தில் கலந்து கொள்ளும்பொழுது ஒவ்வொரு குடும்பத்திற்கும் கிடைக்கும் என்பதால் அனைவரும் நிச்சயமாக இந்த வைபத்தில் கலந்துகொள்ள வேண்டியது.

முக்கியமாக 60 வயது தாண்டியவர்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்யடி அதி முக்கியமான வைபவம் இது.

**அன்பார்ந்த வாசகர்களுக்கு,**

தங்களுடைய ஜாதகப்படி பலன்களை தெரிந்துகொள்ள, தங்களுடைய ஜாதக நகலையும் 5 கேள்விகளையும் ரூ.250யையும் சேர்த்து அனுப்பி வைத்தால், தங்களுக்கு தங்கள் ஜாதகப்படி தாங்கள் அனுப்பிய கேள்விகளுக்கு விரிவாக பதில்களும், பரிகாரங்கள் தேவைப்பட்டால் பரிகாரங்களும் எழுதி அனுப்பி வைக்கப்படும். Original ஜாதகத்தை அனுப்ப வேண்டாம். நகலை அனுப்பவும், ஜாதகம் இல்லாதவர்கள், தங்கள் பெயர், பிறந்த தேதி, பிறந்த நேரம், பிறந்த ஊர் என்ற விபரத்துடன் ரூ.100 சேர்த்து அனுப்பி வைத்தால் பலன்கள் எழுதி அனுப்பப்படும்.

தொகை கல்யாண ராம அய்யர் என்ற பெயரில் M.O./DD/Chennai Local Cheque மூலம் அனுப்பலாம்.

**குருஜி கல்யாணராம அய்யர்**

**அன்பார்ந்த வாசகர்களுக்கு மற்றும் ஒரு விண்ணப்பம்**

இந்த விசேஷமான புத்தகத்தில் எவ்வளவு விஷயங்கள் இருக்கின்றன என்று தெரிந்து கொண்டு இருப்பீர்கள். இதை அனைவருக்கும் தெரிவிக்க வேண்டும் என்றும், நம்முடைய இந்து மத சம்ப்ரதாயத்தில் எவ்வளவு அருமையான விஷயங்கள் இருக்கின்றன என்றும், முடிந்தவரை அனைவருக்கும் இந்த விஷயங்கள் போய் சேர வேண்டும் என்றும் நினைக்கின்றோம். அதனால் உங்களிடம் மற்றும் ஒரு விண்ணப்பம், உங்களுடைய நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள், நன்றாக தெரிந்தவர்கள் ஆகியோருடைய முகவரியை எங்களுக்கு தெரியப்படுத்தினால், அவர்களுக்கு இந்தப் புத்தகத்தை இலவசமாக அனுப்பலாம் என்றிருக்கின்றோம். அதனால் முடிந்தவரை 10 முகவரிக்கு குறையாமல் எங்களுக்கு எழுதி அனுப்பவும். முகவரியை தெளிவாக எழுதி அனுப்பவும்.

“தர்மத்தை நாம் ரட்சித்தால், தர்மம் நம்மையும் நம் சந்ததியினரையும் காப்பாற்றும்” என்பது வேதவாக்கு. நம்மால் முடிந்தவரை தர்மத்தைச் செய்வோம். பலருக்கும் உபயோகமாக இருப்போம்.

**குருஜி கல்யாணராம அய்யர்**

# நிகழ்ச்சி நிரல்

(விரிவான விபரங்கள், இந்த வைபவ பத்திரிக்கையுடன் கொடுக்கப்பட உள்ளோம்)

இடம்: **காமாக்ஷி கம்யூனிட்டி ஹால்,** நெ.3,இந்திராகாந்தி குறுக்கு தெரு,

ராதா நகர் மெயின் ரோடு, குரோம்பேட்டை, சென்னை-44. (போன் : **22651809**)

| | | |
|---|---|---|
| **28.5.2011 :** | 5.30am | பூர்வாங்கம் |
| *சனிக்கிழமை* | | ஸ்ரீ மகா கணபதி ஹோமம் |
| | | ஸ்ரீ நவக்கிரக ஹோமம் |
| | | ஸ்ரீ லக்ஷ்மி குபேர ஹோமம் |
| | 8.30am | பூர்ணாஹுதி தீபராதனை |
| | 10.00am | கட ஸ்தாபனம் |
| | 5.00pm to 6.00pm | ஸ்ரீ மகாலஷ்மி யோக பீடம், ஸ்ரீ மகாலக்ஷ்மி மூலமந்த்ர ஜப மண்டலி நடத்தும் ஸ்ரீ மஹாலக்ஷ்மி மூல மந்த்ர ஜபம் |
| | 6.00pm to 7.00pm | *ஸ்ரீ அமிர்த சிரஞ்சிவிநிகள் திருக்கோயில்கள் என்பதைப் பற்றி குருஜியின் விளக்கம்* |
| | 7.00pm to 9.00pm | உபந்யாசம், பொருள் : *ஸ்ரீ மகாலக்ஷ்மி கடாட்சமும், ஜப மண்டலியின் முக்கியத்துவமும்* |
| **29.5.2011** | 5.00am | பூஜைகள் ஆரம்பம் |
| *ஞாயிற்றுக்கிழமை* | 7.00am | *ஸ்ரீ மஹந்யாசம் ஸஹித ஸ்ரீ ருத்ர ஜபம் ஆரம்பம்* |
| | 9.00am | *ஸ்ரீ ருத்ர ஹோமம் ஆரம்பம்* |
| | 12.00noon | **வஸோர்த்தாரை (இது தான் இந்த மொத்த வைபவத்தில் முக்கியமான அங்கமாகும்)** |
| | | பூர்ணாஹுதி |
| | | தீபாராதனை |
| | 1.00 pm | பிரசாதங்கள் விநியோகம் |
| | | தீர்த்த கடங்கள் விநியோகம் |

## ஸ்ரீ மஹா ருத்ர ஹோமத்திற்கு வேண்டிய பொருள்களும் அதற்குண்டான கைங்கர்ய பலன்களும்

| வரிசை எண் | பொருட்கள், தொகை மற்றும் கைங்கர்ய பலன்கள் |
|---|---|
| *1.* | <br>**தீர்த்த கடம் அதாவது தீர்த்த கலசம்**<br>**(பித்தளைக் குடம் ¾ அடி உயரம்)**<br>**தொகை :** ஒரு கடத்திற்கு ரூ.1,500<br>**தீர்த்த கலசத்திற்கு முன்பதிவும், முன் பணமும் முக்கியம்**<br>**கைங்கர்ய பலன்கள் :**<br>இந்த வைபவத்தில் வைத்து பூஜை செய்யப்பட்ட இந்த கலசம் அதாவது கடம் ஒன்று சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்து மீதம் உள்ள தீர்த்தத்துடன் உபயதாரருக்கு கொடுக்கப்படவுள்ளது<br>1. இந்த கலசம் நம் வீட்டிற்கு வருவது அமோகமான பலன்கள் மொத்த குடும்பத்திற்கும் கிடைக்கும்<br>2. இதில் உள்ள தீர்த்தத்தை வீட்டில் உள்ள அனைவரும் புரோஷணம் அதாவது தெளித்துக் கொண்டால் நம்முடைய வீடு மனை, வாகனங்கள் கட்டிடங்கள், தொழிற்சாலைகள், Officeகள் Godownகள் என்ற பல இடங்களிலும் தெளிக்கும் பொழுது, நமக்கு தெரிந்தோ தெரியாமலோ ஏற்பட்ட பாபங்கள், தோஷங்கள், திருஷ்டிகள், சாபங்கள், பித்ரு சாபங்கள் அனைத்தும் தீரும். 7 தலைமுறைகளில் ஏற்பட்ட பல சாபங்கள் தீரும்.<br>**பல புண்ணிய பலன்கள் கூடும். இந்த புத்தகத்தில் படித்த அனைத்து பலன்களும் கிடைக்கும். மேலும், முக்கியமாக பக்கம் 31ல் உள்ள ஸ்நாந மஹா சங்கல்ப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து பலன்களும் நிச்சயமாக கிடைக்கும்.**<br>கலசத்திற்கு பணம் கட்டிய வெளியூர் தர்மவான்களுக்கு, ஹோமத்தின் கடைசி நாள் வந்து கலசம் கையில் வாங்கிக் கொள்ள முடியாவிட்டால், கலசமும் தீர்த்தமும் (Bottleலில்) Speed Post Parcel மூலம் மற்ற பிரசாதங்களுடனும், மறு நாள் தாங்கள் கொடுத்த முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும், இதற்காக தனியாக **ரூ.200** சேர்ந்து அனுப்பவும். |
| *2.* | **சங்கல்ப்ப கட்டணம்**<br>**தொகை :** ஒருவருக்கு ரூ.300<br>**கைங்கர்ய பலன்கள் :**<br>இந்த புத்தக்தில் எழுதி உள்ள அனைத்து பலன்களும் கிடைக்கும் |
| *3.* | **அன்னதானம்** குறைந்த பட்சம் ஒரு நாளுக்கு **ரூ.100** வீதம் 2 நாட்களுக்கு **ரூ.200** முடிந்தவர்கள் அதிகமாகவும் கொடுக்கலாம்.<br>**அன்னதானம்**<br>ஒரு நாள் மொத்த அன்னதான உபயம் **ரூ.1,00,000** (முடிந்தவர்கள் இந்த பெரிய கைங்கர்யத்தை ஏற்கலாம். இரண்டு நாட்களுக்கு இரண்டு தர்மாவான்களை எதிர்ப்பார்க்கிறோம்.)<br>**கைங்கர்ய பலன்கள் :**<br>அன்னதானப் பலன்கள் இது அனைவருக்கும் தெரிந்த விஷயம் |
| *4.* | **பொருள்கள் :**<br>**9 X 5 வேஷ்டி, அங்கவஸ்திரம், திரிதிய வஸ்திரம்**<br>**தொகை : ரூ.600** Per set *(மொத்தம் 200* Sets *தேவை)*<br>**கைங்கர்ய பலன்கள் :**<br>பணம், செல்வம் எல்லாவற்றையும் விட வாழ்க்கையில் கௌரவம் மிகவும் முக்கியமானது. இந்த வஸ்திர தானம் இந்த பலனை அமோகமாக கொடுக்கும். |
| *5.* | **நெய் 30 கிலோ ஒரு நாளைக்கு**<br>**தொகை : ரூ.6,000** ஒரு நாளைக்கு<br>**கைங்கர்ய பலன்கள் :**<br>அக்னிக்கு ஆகாரம் நெய், அக்னி அனைத்தையும் பொசுக்கக்கூடியது. அதுபோல், நாம் செய்த அனைத்து பாபங்களையும் இந்த ஆஜ்ய தானம் அதாவது நெய் தானம் போக்கவல்லது |
| *6.* | **ஹோமம் திரவியங்கள் மற்றும் ஹோமத்துக்கு வேண்டிய அனைத்து பொருள்களும்**<br>**தொகை : ரூ.36,000** ஒரு நாளைக்கு<br>**கைங்கர்ய பலன்கள் :**<br>ஹோமங்கள் மூலம் அனைத்தையும் சாதிக்கலாம். நாம் அக்னியில் சேர்க்கும் அனைத்து திரவியங்களும் அக்னி மூலம் நேரிடையாக தெய்வத்திற்கு போய் சேருகிறது. நாம் நினைத்த அனைத்து காரியங்களையும், தெய்வம் செய்து கொடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகும். பெரிய பயனைத் தரும் இந்த திரவிய தானம் |

| வரிசை எண் | பொருட்கள், தொகை மற்றும் கைங்கர்ய பலன்கள் |
|---|---|
| 7. | **புஷ்ப கைங்கர்யம்**<br>**தொகை : ரூ.10,000** ஒரு நாளைக்கு<br>**கைங்கர்ய பலன்கள் :**<br>ஒரு புஷ்பத்தை சேர்த்தாலே, பலன்கள் பல கோடி. இவ்வளவு நாட்கள் இவ்வளவு தேவதைகளுக்கும், கலசங்களுக்கும் சேர்ந்தால் எவ்வளவு பலன்கள் கிடைக்கும் என நீங்களே தெரிந்து கொள்ளலாம். |
| 8. | **ஸ்ரீ ருத்ரருக்கு அபிஷேகமும், ஸ்ரீ மகாலக்ஷ்மி, ஸ்ரீ மகாவிஷ்ணுவிற்கு திருமஞ்சனம்**<br>தொகை : **ரூ5,000** ஒரு நாளைக்கு<br>**கைங்கர்ய பலன்கள் :**<br>அபிஷேகமும், திருமஞ்சனமும், மனத்தை குளிர வைக்கும். நோய் நொடிகள் தீரும். பூரண ஆரோக்யம் கிடைக்கும். உடல் பலம், தேக பலம் கிடைக்கும். |
| 9. | **அரிசி 250 கிலோ ஒரு நாளைக்கு**<br>**தொகை : ரூ.10,000** ஒரு நாளைக்கு<br>**கைங்கர்ய பலன்கள் :**<br>அன்னதான பலன்கள் முழுவதும் கிடைக்கும் |

**குறிப்பு : இந்த கைங்கர்யங்களில் கலந்து கொள்பவர்கள், தொகையை ஸ்ரீ மகாலக்ஷ்மி யோக பீடம் என்ற பெயரில் M.O./D.D./Chennai Local Cheque மூலமாக, மேற்குறிப்பிட்ட அலுவலக முகவரிக்கு தபால் மூலமோ, COURIER மூலமோ அனுப்பலாம். குருஜியிடமும் கொடுக்கலாம், ரொக்கமாகவும் குருஜியிடமும் கொடுக்கலாம். பக்கம் 16ல் உள்ள சங்கல்ப்ப படிவத்தில் உள்ள விபரங்களையும் தவறாமல் அனுப்பவும்.**

# ஹோம பிரசாதங்கள்

| | |
|---|---|
| 1. ஒரு கலசத்திற்கு கைங்கர்யம் செய்பவர்களுக்கும், **ரூ.2000** க்கு மேல் பணமும் பொருளும் கொடுக்கும் தர்மவான்களுக்கும் | ஹோமத்தில் வைக்கப்பட்ட தீர்த்தத்துடன் கலசம் ஒன்று<br>+<br>ஹோம ரட்சை, விபூதி, குங்குமம், அட்சதை |
| 2. சங்கல்பத்திற்கும் அன்னதானத்திற்கும் பணமும், பொருளும் கொடுக்கும் தர்மவான்களுக்கும். | ஹோம ரட்சை, விபூதி, குங்குமம், அட்சதை |

# ஸ்ரீ மகா லக்ஷ்மி யோக பீடம்

## புராணோக்த புரோகித ப்ரயோக பாட சாலை

அலுவலகம் : 1/B, முதல் மாடி, சி.எல்.சி. ஒர்க்ஸ் ரோடு, குரோம்பேட்டை, சென்னை – 44.
பாடசாலை : 55, துளசிங்கம் தெரு, சாமுண்டீஸ்வரி நகர், குரோம்பேட்டை, சென்னை–44.

ஸ்தாபகர் : **குருஜி கல்யாணராம அய்யர்**

## சங்கல்ப்ப படிவம்

இந்த வைபவங்களில் கலந்து கொள்ளும் அனைவரும், கைங்கர்யம் செய்யும் அனைவரும் கீழ்க்கண்ட, சங்கல்ப்பப் படிவத்ததை பூர்த்தி செய்து அனுப்பவும். இந்த பூஜையில் கலந்து கொள்ள, இந்த விபரங்கள் மிகவும் முக்கியம். ஒரு குடும்பத்தை சேர்ந்தவர்கள், வெவ்வேறு ஊர்களில் இருந்தால், அவரவர்களுடைய முகவரியை தனித் தனியாக, தெளிவாக, எழுதி அனுப்பவும். ஒவ்வொருவருடைய Land line Phone number/ Mobile Number என்று தனித் தனியாகவும் எழுதி அனுப்பவும்.

**குறிப்பு :** இந்த விபரங்களை தனித் தாளில் தெளிவாக எழுதி, மேற்கண்ட அலுவலக முகவரிக்கு, தபால் மூலமாகவோ அல்லது Courier மூலமாகவோ அனுப்பி வைக்கவும். பிரசாதங்கள் தபாலில் அனுப்பவும், மற்ற விபரங்களை தங்களுக்கு அனுப்பவும், தங்களை தொடர்பு கொள்ளவும், இந்த விபரங்கள் முக்கியமானதாகும்.

| உறவு முறை | பெயர் | கோத்ரம் | நட்சத்திரம் | ராசி | பிறந்த தேதி (ஆங்கிலம்) | முகவரி தொ.பேசி, கைப்பேசி எண், E-mail Addres |
|---|---|---|---|---|---|---|
| குடும்பத் தலைவர் | | | | | | |
| மனைவி | | | | | | |
| தந்தை | | | | | | |
| தாயார் | | | | | | |
| மகன் | | | | | | |
| மகள் | | | | | | |
| மருமகன் | | | | | | |
| மருமகள் | | | | | | |
| பேரன் | | | | | | |
| பேத்தி | | | | | | |

# ஸ்ரீ மகா லக்ஷ்மி யோக பீட,
# ஸ்ரீ மகா லக்ஷ்மி மூலமந்த்ர ஜபமண்டலி

ஸ்ரீ மகா லக்ஷ்மி கடாட்சம் அனைவருக்கும் தேவை. ஸ்ரீ மகா லக்ஷ்மி கடாட்சத்தால், உங்கள் வீட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் சுப, சௌக்கிய, சௌகரிய, சௌபாக்யம், தீர்க்க ஆயுள், ஆரோக்யம் நிச்சயமாகக் கிடைக்கும்.

ஸ்ரீ மகா லக்ஷ்மி கடாட்சம் உங்கள் வீட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் இந்த ஸ்ரீ மகா லக்ஷ்மி யோக பீட, ஸ்ரீ மகா லக்ஷ்மி மூல மந்த்ர ஜப மண்டலியை ஆரம்பித்து இருக்கிறோம்.

- ஜபம் என்பது மிகவும் முக்கியம், ஜபத்தால் நாம் அனைத்து காரியங்களையும் சாதிக்கலாம்.
- தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு ஊரிலும், இந்த மண்டலியின் கிளைகளை ஏற்படுத்தி, இந்த மந்த்ரத்தை அனைவரும் ஜபம் செய்ய வேண்டும் என்று நினைக்கின்றோம்.
- இந்த ஜப பலனால், ஸ்ரீ மகா லக்ஷ்மி கடாட்சம் பரிபூரணமாக ஜபம் செய்பவர்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும். வீடு முன்னேறினால், அந்த ஊர் முன்னேறும், ஒவ்வொரு மாவட்டமும் முன்னேறும், தமிழ் நாடே முன்னேறும். தமிழ்நாடு எல்லா செல்வ கடாட்சம் பெற, இந்த ஜப மண்டலியில் பங்கேற்று, நாமும் முன்னேறி, நம்மை சார்ந்தவர்களையும் முன்னேற்றி, நம் நாட்டையே முன்னேறச் செய்வோம்.
- இதுதான் நம்முடைய முக்கிய நோக்கம். மேலும் இது செலவே இல்லாத உயர்ந்த உபாயம் ஆகும்.

மேற்சொன்ன பலன்களுக்காக, சென்னை, குரோம்பேட்டை, சாமுண்டீஸ்வரி நகர், துளசிங்கம் தெரு எண்.55இல் உள்ள வேத பாடசாலையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை 10.00 மணி மேல் 11.00 மணி வரை ஸ்ரீ மகா லக்ஷ்மி யோக பீட, ஸ்ரீ மகா லக்ஷ்மி மூல மந்த்ர ஜப மண்டலியின் சார்பாக ஸ்ரீ மகா லக்ஷ்மி மூல மந்த்ர ஜபம் நடைபெறுகிறது. இந்த ஜபத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இந்த ஜபத்தில் பங்கேற்கும்பொழுது, நமக்கு, வாழக்கைக்கு வேண்டிய, பணம், பொருள், செல்வம், வீடு, மனை, வாகனங்கள், பால் பாக்யம், சுப, சௌக்கிய, சௌகர்ய, சௌபாக்யம், தீர்க்க ஆயுள், ஆரோக்யம், பட்டு வஸ்திரங்கள், தங்க நகைகள் அனைத்தும் கிடைக்கும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

அதனால், அனைவரும் இந்த ஜபத்தில் பங்கேற்று, மேற்சொன்ன எல்லா பலன்களையும் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இந்த ஜப மண்டலியைப் பற்றி தெரிந்து கொள்ளவும், உங்கள் ஊரில் உங்கள் பகுதியில் இந்த ஜப மண்டலியை ஆரம்பிக்க நினைப்பவர்களும், எங்களுக்கு கடிதம் எழுதவும். அல்லது தொலைபேசியின் மூலம் தொடர்பு கொள்ளவும். நாங்கள் உங்களுக்கு எல்லா தகவல்களையும் அனுப்புகிறோம். உங்கள் அருகாமையில் ஜப மண்டலியின் கிளையிருந்தால், அந்த ஜப மண்டலியில் சேர்ந்து பயன் பெறலாம்.

மற்றும் எல்லா விபரங்களுக்கும் குருஜியை சந்திக்கவும் அல்லது தொடர்வு கொள்ளவும்

**நிகழ்ச்சி நிரல்**

**ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும்**

| | |
|---|---|
| காலை 10.00 மணிக்கு : | **ஸ்ரீ மகா லக்ஷ்மியை வரவேற்கும் பாடல்** |
| 10.10 மணிக்கு : | **108 முறை ஸ்ரீ மகா லக்ஷ்மி மூலமந்த்ரம் ஜபம்** |
| 10.40 மணிக்கு : | **ஆர்த்தி பாடல்** |
| 10.55 மணிக்கு : | **தீபாராதனை** |
| 11.00 மணிக்கு : | **பிரசாதம் வழுங்குதல்** |

## ஸ்ரீ அமிர்த ம்ருத்யுஞ்ஜய ஈஸ்வரர் (சிவலிங்கம்)

ஒவ்வொரு புஷ்பத்திற்கும் வெவ்வேறு நிறங்கள் உண்டு. வெவ்வேறு நறுமணமும் உண்டு. நிறத்தைப் பார்க்கலாம் ஆனால் நறுமணத்தை பார்க்க முடியாது. உணரத் தான் முடியும். அதுபோல் ஒவ்வொரு தெய்வ விக்ரஹத்திற்கும் வெவ்வேறு உருவ அமைப்பும், அந்த விக்ரஹம் வெவ்வேறு விசேஷமான பலன்களையும் தரவல்லது.

ஸ்ரீ மகாலக்ஷ்மி யோக பீடம் சார்பாக, ஸ்ரீ அமிர்த சிரஞ்சீவிநிகள் திருக்கோயில்கள் என்ற விசேஷமான கோவில் ரூ.10 கோடி செலவில் நிர்மாணம் ஆகி கொண்டு இருக்கின்றது. இதில் 309 தெய்வங்கள் பிரதிஷ்டை ஆக போகின்றது. இதில் ஸ்ரீ மகாலக்ஷ்மியும் ஸ்ரீ மகா விஷ்ணுவும் பிரதான தெய்வங்கள். அடுத்து மிகவும் முக்கியமான தெய்வம் ஸ்ரீ அமிர்த ம்ருத்யுஞ்ஜய ஈஸ்வரர். இவர் முக்கியமாக அனைவருக்கும், நீண்ட ஆயுள் பலத்தையும், நல்ல ஆரோக்கியத்தையும் தர வல்லவர். இது ஒரு சிவலிங்கம் ஆகும். இதில் உள்ள பாண லிங்கம் (அதாவது மேல் பகுதி) இமயமலையில் இருந்து நம்முடைய கோவிலுக்கு வந்து இருக்கின்றது இது சுயம்புவாக உருவான லிங்கமாகும். இவ்வளவு விசேஷமான இந்த ஸ்ரீ அமிர்த ம்ருத்யுஞ்ஜய ஈஸ்வரர் சிவலிங்கத்திற்கு அனைவரும் தங்கள் கைகளாலேயே அபிஷேகம் காலை 10.00 மணி முதல் 11.00 மணி வரை செய்யலாம். முக்கியமாக நீண்ட ஆயுள் பலத்தை வேண்டியும் நல்ல ஆரோக்கியம் கிடைக்கவும் தங்கள் கைகளால் அபிஷேகம் ஆத்மார்த்தமாக செய்யலாம். இதற்கு எந்தவிதமான கட்டணமும் இல்லை. ஆனால் முன் பதிவு முக்கியம். முன் பதிவிற்கு குருஜியிடம் தொலைபேசி மூலமோ, கடிதம் மூலமோ அனுமதி பெறவும். கோவில் உள்ள முகவரி ஸ்ரீ மகாலக்ஷ்மி யோக பீடம், வேத பாடசாலை, 55, துளசிங்கம் தெரு, சாமுண்டீஸ்வரி நகர், குரோம்பேட்டை, சென்னை-44.

மேலும் இந்த கோவிலில் வேண்டுபவர்களுக்கு அதாவது தேவையானவர்களுக்கு ஸ்ரீ அமிர்த ம்ருத்யுஞ்ஜய ஹோமமும் செய்து கொடுக்கிறோம். இதற்கு கட்டணம் ரூ.5000 (எல்லா செலவும் உள்பட) நேரம் காலை 9.00 மணி முதல் 12.30 மணி வரை முன் பதிவு மிகவும் அவசியம். பலன்கள் ஆயுள் விருத்தி மற்றும் ஆரோக்கியவிருத்தி.

மற்றும் எல்லா விபவரங்களுக்கும் குருஜியை சந்திக்கவும் அல்லது தொடர்பு கொள்ளவும்.

என்றும் உங்கள் குடும்ப சுபீட்சத்திற்கு
உதவும் சேவையில்,

**குருஜி கல்யாணராம அய்யர்**

கொண்டு, மலை, காடுகளுடன் கூடிய, மரம், செடி, கொடிகளுடன் கூடிய பூமியை, தங்கத்துடன் தானம் செய்பவன் அடையும் புண்யத்தை விட, அதிகமான புண்யத்தை, ஒரு முறை ருத்ர ஜபம் செய்வதால் அடைவான்." என்று கூறும் சைவ புராண வாக்கியத்தினாலும்,

11. "எல்லா உப நிஷத்துக்களின் ஸாரமாக ருத்ராத்யாயம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உலக இன்பங்கள் விரும்புவர்களுக்கும், முக்தி விரும்புபவர்களுக்கும் பிராயச்சித்தம் செய்து கொள்ள நினைப்பவர்களுக்கும், ருத்ர-உப நிஷத்தைவிட்டால் வேறு உபாயம் இல்லை. காலையில் எழுந்து சிரத்தையுடன் இந்த ருத்ராத்யாயத்தை எவன் கைகுவித்தபடி சொல்கிறானோ, ஓ அரசே அவனுக்கு அடைய முடியாத ஸுகம் ஏதும் இல்லை." முதலிய மஹா பாரத வசனத்தாலும், அனைத்து பாபங்களையும் போக்கக் கூடியதாகவும், ஜபிக்கும் தருணத்திலேயே சுத்தியை கொடுக்க வல்லதாயும், அனைத்து தேவதைகளின் ப்ரியத்தை சம்பாதித்து தருவதாகவும், போக மோக்ஷத்தை அளிக்க வல்லதாயும் பூமி முழுவதையும் தானம் செய்வதனால் ஏற்படும் புண்ணியத்தை விட, அதிக புண்ணியத்தை அளிக்க வல்லதாகவும் கிடைத்தற்குரிய அனைத்து பொருட்களையும் கிடைக்கச் செய்வதாயும் நிச்சயம் செய்யப்பட்டவைகளும் ஆரம்பத்தில் நமஸ்காரங்கள், முடிவில் நமஸ்காரங்கள், முன்பும் பின்பும் நமஸ்காரங்கள், என்று 169 மஹா மந்த்ரங்களில் உருவானவைகளும்,

ஆபஸ்தம்ப ஸுத்ரகாரர் கூறிய யஞ்ய விதிகளில் மஹாக்னி சயன அங்க ஹோமத்தில் கூறப்பட்ட நாமங்களாலும், ஜாபாலர், மாந்தாதா சௌனகர் ஸாயனாச்சாரியர், வஸிஷ்டர், யாஜ்ஞவல்க்யர், அத்ரி, ஆங்கிரஸர், யாஸ்கர், சாகப்ரோர்ணி முதலிய மஹர்ஷிகளால் எழுதப்பட்ட யஜ்ஞ முறைகளிலும் தர்மார்த்த, காம, மோக்ஷாதி, அனைத்து இஹ-பர லாபங்களுடைய உபாயமாக கூறப்பட்டவைகளும், மஹாபாரத ஸ்காந்த, வாயு முதலிய மஹா புராணங்களில் புத்திரன் - பசு - கல்வி - ஐஸ்வரியம் முதலியவற்றை கொடுக்க வல்லதாக பன்முறை அறிவிக்கப்பட்டதும், தைத்திரீய கிருஷ்ண யஜுர் வேத சாகையின் நடுவில், அக்னி காண்டத்தின் உள் இருப்பவைகளும், நான் மறை ஸார பூதங்களும் ஸ்ரீமத் பஞ்சாக்ஷர மஹா மந்திரத்தை உள்ளடக்கியதுமான,

**<u>ஸ்ரீ ருத்ர மந்திரங்களுடைய</u>**, மூன்றாக பிரிக்கப்பட்ட முறை, ஆறாக பிரிக்கப்பட்ட, பதினாறாக பிரிக்கப்பட்ட, நாற்பத்தி எட்டாக பிரிக்கப்பட்ட, நூற்றி அறுபத்தொன்பதாக பிரிக்கபட்டவைகளுமான, பல முறைகளில் ஏதாவது, ஒரு முறையை ஏற்று, தசாம்சம் (1/10), சதாம்சம் (1/100), ஸம்பூரண ஹோமங்கள் என்ற முறைகளில், ஏதாவதொரு ஹோம முறையில், ப்ராம்மணர்களுடன், ஆசார்யனை முன்னிருத்திக் கொண்டு, ருத்விக்குகள் வாயிலாகவும், மஹார்ணவம், வாயு புராணம், இவற்றில் கூறிய முறைப்படி, முன்னும், பின்னும், செய்ய வேண்டிய அங்கங்கள் எனப்படும் கோ தானம் நாந்தி ஸ்ரார்த்தம், வைஷ்ணவ ஸ்ரார்த்தம், தச தானம் முதலியவை களுடன் முடிவில் வஸோர்தாராவுடன் கூடிய **ஸ்ரீ மஹா ருத்ர ஹோமம்** எனும் மங்களத்தைத் தரும் மஹா ப்ராயச்சித்த ரூபமான சிவாராதனை என்னும் கர்மாவை செய்யப் போகிறேன்.

## பிற் சேர்க்கை "மூன்று"

**சமக பாராயண பலன்கள் :-**

"அக்னியும், விஷ்ணுவும் ஆகியவர்களே: எங்களிடம் ஒருமித்து அன்பு கனியும் மனமுடையவர்களாக நீங்களிருவரும் இருக்க வேண்டும். உங்களை துதிக்கும் இவ் வார்த்தைகள் செழிக்க வேண்டும். நீங்களிருவரும் ஸகல ஐசுவர்யங்களுடன் உணவுப் பொருட்களுடனும் எங்களை அனுக்ரஹிக்க எழுந்தருள வேண்டும்."

"அன்ன பானங்கள் பகவானை ஆராதிக்கும் என்னிடம் என்றும் உள்ளன. அன்னமிடும் மனதும், பரிசுத்தமும், உத்ஸாஹமும், அன்ன ரஷணமும், அன்னத்தை சம்பாதிக்கும் யாகமும், யாகத்தில் ஸ்வரத்துடன் மந்திரங்களை உச்சரிக்கும் சக்தியும், புகழும், சொல்லுந்திறமையும், கேள்வித்திறமையும், உள்ளொளியும், ஸ்வர்க்கமும், பிராணனும், உயிரும், சித்தமும் சித்தத்தால் அறியப்படும் பொருளும், வாக்கும், மனதும், கண்ணும், காதும், ஞானேந்திரியங்களின் சக்தியும், கர்மேந்திரியங்களின் சக்தியும், பிராண சக்தியும், சத்துருக்களை வெல்லும் திறமையும், ஆயுளும், முதுமையும், அந்தராத்மாவும், நல்ல உடலும், சுகமும், உடலைக் காக்கும் கவசம் முதலியனவும், திடமான உறுப்புகளும், எலும்புகளும், கணுக்களும், இன்னும் உடலிலுள்ள எல்லா அவையங்களும் திடமாக ஸ்ரீ ருத்ரனை ஆராதிக்கும் எனக்கு உள்ளன.

மேன்மையும், தலைமையும், ஆழங்கான முடியாத மனமும், இனிமையான குளிர்ந்த ஜலமும், வெற்றித் திறமையும், வெற்றிப் பெருமையும், வீடு, நிலம் முதலிய செல்வமும், புத்திர பௌத்திரர்களும், அழியாத சந்ததியும், செல்வப்பெருக்கும், வித்தையின் வளர்ச்சியின் உண்மையும், நன்னம்பிகையும், ஸ்தான, ஜங்கமப் பொருள்களும், தனமும், வசீகரண சக்தியும், சரீர காந்தியும், ஆடல், பாடல்களும், அதனால் வரும் களிப்பும், உண்டானதும், உண்டாகப்போவதும், தேவதைகளின் ஸ்துதியும், புண்ணியமும், சேமித்த பொருளும், இனி கிடைக்கக் கூடிய பொருளும், சேமித்த நிலம் முதலிய சொத்தும், இனி வரப்போகும் நிலம் முதலிய சொத்தும், நல்ல வழியும், கை கூடிய யகாதிகளின் நற்பயனும், கை கூடவிருக்கும் நற்பயனும், ஒழுங்காகத் திரட்டிய பொருளும், ஊக்கத்தையும், திறமையும், ராஜ காரியம் முதலியவற்றைப் பராமரிக்கக் கூடிய திடச் சித்தமும் ஸ்ரீ ருத்ரனை ஆராதிக்கும் எனக்குச் சித்திக்கின்றன.

இவ்வுலக இன்பமும், மேலுலக இன்பமும், பிரியமும், அதனால் ஏற்படும் ஆசையும், அவ்வாசையின் அனுபவமும், மனதிற்கினிய உற்றாரும், மங்களமும், உயர் நலமும், நல்ல வாசஸ்தானமும் புகழும், சௌபாக்யமும், செல்வமும், வழிகாட்டும் ஆசாரியனும், தந்தை போன்று தாங்குபவனும், உடைமையின் ரக்ஷணமும், தைரியமும், எல்லாருடைய அனுகூலமும், வெகுமானமும், வேத சாஸ்திர ஞானமும், போதனா சக்தியும், மக்களை ஏவுந்திறமையும் பணியாட்களை நடத்தும் திறமையும், மேழிச்செல்வமும், இடையூறுகளின் ஒழிவும், யாகங்களை

முதலிய நற்கருமமும், அதன் புண்ணிய பலன்களும், நீடித்த க்ஷயம் முதலிய நோயின்மையும், குறுகிய ஜ்வரம் முதலிய நோயின்மையும், நோயற்ற வாழ்வுக்கு உரிய மருந்தும், நீண்ட ஆயுளும், நல்ல சிநேகிதர்கள் கிடைத்தலும், பயமின்மையும், நன்னடக்கமும், நல்ல சயனமும், பகவத் ஸ்மரணையுடன் கூடிய விடியற்காலையும், யஞ்யம், தானம், அத்தியயணம் முதலிய பாவனமான காரியங்களுடன் கூடிய பகற் பொழுதும் ஸ்ரீ ருத்ரனை ஆராதிக்கும் எனக்கு சித்திக்கின்றன அதாவது கிடைக்கின்றன.

அன்னமும் பிரிய வசனமும், பாலும், அதன் சாரமும் நெய்யும், தேனும், உற்றாறுடன் கலந்து உணவு அருந்துதலும், பயிர் தொழிலும், மழையும், வெற்றியளிக்கும் பூமியும், மரம், செடி, கொடிகளின் உற்பத்தியும், பொன்னும்,பொருளும், மணிகளும், செல்வத்தின் செழிப்பும், திடகாத்திரமும், சிறந்த தானிய வளர்ச்சியும், அதனால் ஏற்படும் மேன்மையும், அதன் பல வகை விசேஷங்களும், மேலும், மேலும் வளர்ச்சியும், பரிபூரணமும், பூர்ணத்திற்கு மேலான நிலையும், அழிவற்ற நிலையும், வரகும், அன்னமும், அன்னத்தால் பசி நீங்குதலும், நெல் வகைகளும், வால் கோதுமை வகைகளும், உளுந்து வகைகளும், எள் வகைகளும், பாசிப் பயிறுகளும், தட்டைப் பயிறுகளும், கோதுமைகளும், நரிப் பயறுகளும், தினைகளும் ஊசிச்சம்பா நெல்களும், செந்நெற்களும், ஸ்ரீ ருத்ரனை ஆராதிக்கும் எனக்கு சித்திக்கின்றன அதாவது கிடைக்கின்றன.

கல்லும், மண்ணும் மணல்களும், மரங்களும், பொன்னும் எஃகும், ஈயமும், துத்த நாகமும் இரும்பும், தாமிரம் முதலிய இதர உலோகங்களும், நெருப்பும், ஜலமும், கொடிகளும், மூலிகைகளும், உழுது பயிரிட்டு விளந்ததும், உழுது பயரிடாமல் விளந்ததும் எனக்குச் சித்திக்கின்றன அதாவது கிடைக்கின்றன.

கிராமத்திலுள்ளவைகளும், காடுகளில் உள்ளவைகளுமான பிராணிகள், யாகங்களுக்கு உதவியாக இருக்கட்டும். கிடைத்த பொருளும், இனி கிடைக்கக் கூடிய பொருளும், புத்திரர்களின் செல்வமும், எனது செல்வமும், ஜங்கம சொத்தும், ஸ்தாவர சொத்தும், செயல் திறமையும், அதனால் ஏற்படும் நற்பயனும், அடையக் கூடிய சுகமும் எனக்கு சித்திக்கின்றன.

அக்னியும், இந்திரனும், ஸோமனும், ஸவிதாவும், ஸரஸ்வதியும், பூஷாவும், பிரஹஸ்பதியும், மித்திரனும், வருணனும், த்விஷ்டாவும், விஷ்ணுவும், அசுவினீ தேவர்களும், மருத்தேவர்களும், விச்வேதேவர்களும், பிருதிவியும், ஸ்வர்க்கமும், திசைகளும், மேல் திக்கும், பிரஜாபதியும் எனக்கு அனுக்கிரகிப் பவர்கள் ஆகின்றனர்கள்.

சோமக் கிரஹமும், சூரியக் கிரஹமும், சுக்ரக் கிரஹமும் அந்தர்யாம கிரஹமும், துருவக் கிரஹங்களும், ருதுக் கிரஹங்களும் எனக்கு எப்பொழுதும் நன்மையை அளிக்கின்றன.

ஸமித்தும், தர்ப்பையும், யாக மேடையும் யாக கரண்டிகளும் ஸோம பானப் பாத்திரங்களும், பவித்ரமான கலசங்களும், ஆதவனீய பாத்திரமும், ஹவிஸ்ஸுக்களை வைக்கும் மண்டபமும், ஸபா மண்டபங்களும், அரிசி நெய்யிலான ஹவிஸ்ஸும், பலி பீடங்களும், யாக முடிவில் செய்யும் புரோக்ஷணமும், ஸமித்துகளின் தகனமும், ஆகிய பிரசித்தமான யக்ஞத்தின் விசேஷ திரவியங்களும், அனுஷ்டானங்களும் எனக்கும் சித்திக்கின்றன.

அக்னியும், ஸோம யாகத்துக்கு முன் செய்யப்படும் ப்ரவர்க்கியமும், அர்க்க யாகமும், சூர்ய யாகமும், பிராணாஹுதியும் அசுவமேத யாகமும், பூமி தேவதையும், அதிதி தேவதையும், திதி தேவதையும், ஸ்வர்க்க தேவதையும், சக்வரீ என்னும் சந்தஸ்ஸுகளும் விராட் புருஷனின் அவயவங்களும், என்னிடம் யஞ்யத்தால் கல்பிக்கப்படட்டும். ருக் வேதமும், சாம வேதமும், சாம கான ஸதோத்திரமும், யஜுர் வேதமும், யஜமானனுடைய ஸமஸ்காரமாகிய தீக்ஷையும், பாவத்தைப் போக்கும் உபவாஸம் முதலியனவும், யாகத்திற்குரிய காலமும், பசுவின் பாலை மட்டும் பருகும் விரதம் முதலியனவும், பகலிலும், இரவிலும், பெய்யும் மழையால் பயிர்களின் செழிப்பும் யாகங்களால் என்னிடம் கல்பிக்கப்படட்டும்.

பசுக்களும், கன்றுகளும், ஒன்றறை வயதுக்காளைகளும், ஒன்றரை வயது கிடாரிகளும், இரண்டு வயது காளைகளும் இரண்டு வயது கிடாரிகளும், இரண்டரை வயது காளைகளும், இரண்டரை வயது கிடாரிகளும், மூன்று வயது காளைகளும், மூன்று வயது கிடாரிகளும், மூன்றரை வயது காளைகளும், மூன்றரை வயது கிடாரிகளும், நாலு வயது காளைகளும், நாலு வயது கிடாரிகளும், பொலிக்காளைகளும்,

கொட்டில் பசுக்களும், பெருங்காளைகளும் வந்திப் பசுக்களும், வண்டிக் காளைகளும், கன்று போட்ட பசுக்களும், இவற்றிக்கெல்லாம் நல்ல ஆயுளும், யாகத்தால் என்னிடம் கல்பிக்கப்படட்டும். பிராணன் கல்பிக்கப்படட்டும். அபானன் கல்பிக்கப்படட்டும். கண்ணின் திறமை கல்பிக்கப்படட்டும். காதின் திறமை கல்பிக்கப்படட்டும். மனதின் திறமை கல்பிக்கப்படட்டும். வாக்கின் திறமை கல்பிக்கப்படட்டும். சரீரத் திறமை கல்பிக்கப்படட்டும். இனி அனுஷ்டிக்கப் போகும் யாகங்களின் திறமையும், இந்த யாகத்தால் என்னிடம் கல்பிக்கப்படட்டும்.

பிரபஞ்சம் என்னும் பிரகிருதி எனக்கு வசமாகட்டும். முக்குணங்கள் எனக்கு சாதகமான பலன்களை தரட்டும். 5 பஞ்ச மகா பூதங்களும், 5 ஞானேந்திரியங்களும், மனமும், புத்தியும், 9 துவாரமுள்ள ஸதூல தேகமும், பத்துப் பிராணன்களும் அவற்றிக்கு ஆதாரமான ஸுஷும்னையும், 13 தேவதைகளும், 15 சங்கினீ முதலிய நாடிகளும், 17 லிங்க சரீர அவயங்களும், 19 விதமான ஸஞ்ஜீவினி முதலிய மூலிகைகளும், மர்ம ஸ்தானங்களும், மஹா ரோக தேவதைகளும், சுவர்க்கத்தில் உள்ளது போல தேகத்திலுள்ள அப்ஸரஸ்களும், 27 கந்தர்வர்களும், 29 வித்யுத்தேவர்களும், 31 புவனங்களும், 33 கோடி தேவர்களும், எனக்கு சாதகமாக அமையட்டும்.

4 புருஷார்த்தங்கள், 4 வேதங்கள், 4 உப வேதங்கள், அங்க சாஸ்திரம், சித்தி ரூபமான மகா வித்தைகள், 24

காய்த்ரி அக்ஷரங்கள், இவைகள் அனைத்தும் எனக்கு கல்பிக்கப்படட்டும்.

மேலும், அன்னமும், அதன் உற்பத்தியும், அதன் வளர்ச்சியும், யாகமும், என்னிடம் விளங்குகின்றன. அவற்றிற்கு எல்லாம் காரண பூதனான சூரியனும், உச்சியிலுள்ள வானமும், வானத்தின் அபிமான தேவதையும், பிரளய கால அபிமான தேவதையும், உலக அபிமான தேவதையும், உலகமும், அனைத்திற்கும் அதிபதியுமான பரமாத்மாவும், என்னிடம் அருள் கொண்டு விளங்கக் காண்கிறேன்.

காமதேனு - தேவர்களை அழைப்பவள்

மனு - யஞ்ஞப் பிரவர்த்தகர்,

பிரஹஸ்பதி - மகிழ்ச்சியைப் பொங்குவிக்கும் சாஸ்திர மந்திரங்களை ஜபிக்கிரவர்

விச்வேதேவர்கள் - ஸுக்தங்களைச் சொல்லுபவர்கள்

பூமித்தாயே, காமதேனு, மனு, பிரஹஸ்பதி, விஸ்வே தேவர்கள் ஆகியவர்களுடைய அருளால் குற்றம் நீங்கிய என்னை துன்புறச் செய்ய வேண்டாம். இனிமையானதையே மனதால் நான் எண்ணுவேன் இனிமையானதையே செய்வேன் இனிமையானதையே தேவர்களின் ஆராதனைக்காக எடுத்துச் செல்வேன்.

தேனைப் போல், இனியதையே தேவர்களிடத்தும், நல்லதை கேட்க விரும்பும், மனிதர்களிடத்தும் பேசுவேன். அப்படிப்பட்ட என்னை சொற் குற்றம் வராமல், சோபிக்கும் வண்ணம் தேவர்கள் எங்களை காப்பாற்றட்டும். பித்ருக்களும், ஆமோதிக்கட்டும். அனைவருக்கும் சாந்தி நிலவட்டும்.

## பிற் சேர்க்கை "நான்கு"

**ஸ்நாந மஹா சங்கல்ப்ப மந்த்ரத்தின் அர்த்தங்கள் :-**

*எனக்குத் தெரிந்தோ தெரியாமலோ ஏற்பட்ட பாபங்கள், சாபங்கள், தோஷங்கள், திருஷ்டிகள், பிதுர் சாபங்கள் நிவர்த்திக்காகவும், சரீர சுத்திக்காகவும் இந்த ஸ்நாநத்தை செய்து கொள்கிறேன்.*

*என்னுடைய முதல் ஜென்மாவிலிருந்து இதற்கு முந்தைய ஜென்மா வரையிலும், இந்த ஜென்மத்தில், நான் பிறந்ததிலிருந்து இன்று வரையிலும். மேலும் என்னுடைய சிறிய வயதிலும், யௌவன வயதிலும், மத்திம வயதிலும், முதுமையான வயதிலும், நான் ஜாக்கிரதையாக இருந்த சமயத்திலோ, ஸ்வப்பனத்திலோ, அஜாக்கிரதையாக இருந்த சமயத்திலோ, மனதாலேயோ, வாக்காலேயோ, கர்மேந்திரியங்களாலோ, காரணத்துடனோ, காரணமில்லாமலோ, ரகஸ்யமாகவோ, பிரகாசமாகவோ, ஞானத்துடனோ, அஞ்ஞானத்துடனோ, ஏதாவது பலன் கருதியோ, பலன் கருதாமலோ, செய்த அனைத்து பாதகங்களும், மகா பாதகங்களும், உப பாதகங்களான பாதகங்களுக்கு துணை போனதாலோ, காரணமானதாலோ, எந்த ரூபத்திலும் உப பாதகத்திற்கு உடந்தையாய் இருந்ததாலோ, ஏற்பட்ட தோஷங்கள் எல்லாம் இந்த ஸ்நாநத்தால் நிவர்த்தியாகட்டும். மேலும் ஜாதிப்பிரஷ்டம் செய்யும் அளவுக்கு நான் தவறுகள் செய்திருந்தாலும், எனக்கோ, மற்றவர்களுக்கோ கௌரவம் குறையும்படி நடந்து கொண்டதினாலோ, இதனால் எனக்கு ஏற்பட்ட பாதகங்களிலிருந்தும், நான் ஞானத்துடனோ, அஞ்ஞானத்துடனோ சில காலங்கள் மட்டும் பாபங்கள் செய்திருந்தாலோ, இவையனைத்தும் இந்த ஸ்நாநத்தால் நிவர்த்தியாகட்டும்.*

*மேலும் கோ வதை செய்திருந்தாலோ, குருவுக்கு துரோகம் செய்திருந்தாலோ, தங்கத்தை திருடி இருந்தாலோ, சுரா பானாதிகள் அருந்தியிருந்தாலோ, ராஜபத்னி, குருபத்னி, த்வஜபத்னி, (நண்பர்கள் மனைவி), வேசி இவர்களை தொட்டதாலோ, நண்பர்களிடமிருந்து பணத்தையோ, பொருளையோ, திருடினதாலோ, கண்ட இடத்தில் சாப்பிட்டதாலோ, கெட்டுப்போன பொருட்களை சாப்பிட்டதாலோ, மனைவியை கைவிட்டதாலோ, மாதா, பிதாவுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்யாமல் விட்டதாலோ, பிராமணர்களுக்கும், ஆச்சாரியர்களுக்கும், துரோகம் செய்ததாலோ, நமக்கு சம்பந்தமில்லாத பெண்களை தொட்டதாலோ, ரஜஸ்வலா ஸ்திரிகளை தொட்டதாலோ ஏற்பட்ட பாபங்கள் அனைத்தும் இந்த ஸ்நாநத்தால் நிவர்த்தியாகட்டும்.*

*மேலும், குல தெய்வத்தால் ஏற்பட்ட சாபத்தாலோ, இஷ்ட தெய்வத்தால் ஏற்பட்ட சாபத்தாலோ, கிராம தேவதைகளால் ஏற்பட்ட சாபத்தாலோ, உபாஸனா தெய்வத்தால் ஏற்பட்ட சாபத்தாலோ, ரிஷிகள் சாபத்தாலோ, சித்தர்கள் சாபத்தாலோ, பிராமண சாபத்தாலோ, ராஜகுல சாபத்தாலோ, பித்ருக்கள் சாபத்தாலோ, மஹான்கள் சாபத்தாலோ, நவக்கிரஹங்களின் சாபத்தாலோ, ஸர்ப சாபத்தாலோ, மாத்ரு சாபம், பித்ரு சாபம், களத்ர சாபம், சகோதர சாபம், சகோதரி சாபம், புத்திர சாபம், புத்திரி சாபம், பௌத்திர, பௌத்திரி சாபம், ஜேஷ்டாதிகள் சாபம், கனிஷ்டாதிகள் சாபம், கர்ப்பிணி சாபம், விதவைகள் சாபம், வேசி சாபம், ஆகியவர்களின் சாபத்தாலோ, அனைத்து மிருகங்களினால் ஏற்பட்ட சாபத்தினாலோ, அனைத்து பட்சிகளால் ஏற்பட்ட சாபத்தினாலோ, பஞ்ச பூதங்களால் ஏற்பட்ட சாபத்தாலோ, நவரத்தினங்களால் ஏற்பட்ட சாபத்தாலோ, தீபத்தால் ஏற்பட்ட சாபத்தாலோ, பூர்வ ஜென்மத்தில் ஏற்பட்ட பாபங்களினாலோ, மற்றையோருடைய பொருட்களை திருடிய பாபத்தாலோ, பார்க்கத் தகாததைப் பார்த்ததாலோ, பண்டிதர்களையும், குருவையும் ஏக வசனத்தில் அழைத்ததால் ஏற்பட்ட பாபங்களினாலோ, நீர் நிலைகளுக்கும், காடுகளுக்கும், மரங்களுக்கும், செடி, கொடிகளுக்கும், தான்யாதிகளுக்கும், மூலிகைகளுக்கும், மருந்துகளுக்கும், என்னால் செய்யப்பட்ட பாபங்கள் அனைத்தும் இந்த ஸ்நாநத்தால் நிவர்த்தியாகட்டும்.*

*நான் தெரிந்தோ, தெரியாமலோ செய்த அனைத்து பாபங்கள், சாபங்கள், தோஷங்கள், திருஷ்டிகள், பிதுர்சாபங்கள் அனைத்தும் இந்த ஸ்நாநத்தால் நிவர்த்தியாகட்டும்.*

*- சுபம் -*